ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2022

## சுற்றாடல் சார் செயற்பாடுகள் 1

5

50 புள்ளிகள்

சுட்டெண்:..... 1 மணித்தியாலம்

● சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

1. 'பசுவும் புலியும்' என்ற கிராமிய விளையாட்டை விளையாடும் போது பாடப்படும் பாடல் எது?
   (1) கீழாநோலை மேலாநோலை..... எனத் தொடங்கும் பாடல்
   (2) சங்கிலி புங்கிலி கதவத் திற..... எனத் தொடங்கும் பாடல்
   (3) ஆனகட்டி ஏலேலப்படி சேர் குழப்பி..... எனத் தொடங்கும் பாடல்

2. கிறுக்கல் கவிதைகள், சுவரோவியங்கள் ஆகியன காணப்படும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடம்
   (1) இசுறுமுனி (2) எம்பக்க (3) சீகிரியா

3. தாதுசேன மன்னன் கட்டுவித்த குளம்
   (1) கலாவாவி (2) அபயவாவி (3) மின்னேரியாக் குளம்

4. காசியப்பன் என்ற அரசனால் எழில் மிக்க குன்றாக அமைக்கப்பட்ட 'சித்திரக் குன்றம்' எது?
   (1) பீதுருதாலகாலை (2) சீகிரியா (3) சிவனொளிபாதம்

5. பராக்கிரம சமுத்திரம் காணப்படுவது
   (1) அநுராதபுரத்தில் (2) அம்பாறையில் (3) பொலன்னறுவையில்

6. தேசியக் கொடிக் கமிட்டி, தேசியக் கீதக் கமிட்டி ஆகியவற்றில் அங்கத்தவராக இருந்து செயற்பட்டவர்.
   (1) கலாநிதி T.B. ஜாயா (2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
   (3) கலாநிதி C.W.W. கன்னங்கரா

7. இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படுபவர்
   (1) கலாநிதி T.B. ஜாயா (2) கலாநிதி C.W.W.கன்னங்கரா (3) சேர் D.B. ஜயதிலக

8. 
   உருவில் உள்ளவர்
   (1) அனகாரிக தர்மபால
   (2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
   (3) வண.எஸ். மஹிந்த தேரர்

9. பிரபல எழுத்தாளராகவும் வானியல் விஞ்ஞானியாகவும் உலகிற்கு சிறந்த சேவையாற்றியவர்
   (1) சேர். ஆதர் சி. கிளாக் (2) சேர். டீ.பி. ஜயதிலக (3) கலாநிதி ரீ.பி. ஜாயா

10. பின்வரும் கூற்றுக்களில் வண. எஸ். மஹிந்த தேரர் பற்றியது எது?
    (1) குறைந்த வருமானமுடைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில் வழங்கியமை
    (2) லங்கா மாதா, நிதஹசே மந்ரய போன்ற நூல்களை எழுதி இலங்கை மக்களிடத்தே நாட்டுப்பற்றை வளர்க்க உதவியமை
    (3) கல்லோயாத் திட்டத்தைத் தொடக்கி வைத்தமை

11. இலங்கையில் காணப்படும் வணக்கத்துக்குரியது **அல்லாத** வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடம்
    (1) சிவனொளிபாதம் (2) காலிக்கோட்டை (3) தூபாராமை

www.ikeduk

# LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

zoom Online வகுப்புக்கள்

## பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்



**ICT**

**Maths** **English**

**Tamil** **History**

**Science**





தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

Contact

**76667-4945**

12. இலங்கையின் சிங்களமொழிப் பாடகராகவும், இசையமைப்பாளராகவும் இருந்து இலங்கைக்குப் புகழ் சேர்த்த கலைஞர்

(1) பண்டிதர் டபிள்யு டீ. அமரதேவ (2) அனகாரிக தர்மபால

(3) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

13. 

இந்த ஓவியங்கள் காணப்படுவது

(1) தம்புள்ள விகாரையில்

(2) எம்பக்க தேவாலயத்தில்

(3) சீகிரியாவில்

14. 'கப்ரன் டோசன்' கோபுரம் காணப்படுவது

(1) மாத்தளையில் (2) தம்புள்ளையில் (3) கடுகண்ணாவையில்

15. உருவில் காணப்படுவது



(1) காலிக் கோட்டை

(2) தம்பதெனிய புராதன சின்னம்

(3) அநுராதபுர புராதன சின்னம்

16. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் தாவரங்களைப் பார்வையிடும் போது செய்யக் கூடிய செயற்பாடு

(1) ஞாபகச் சின்னமாக அவற்றின் மீது கிறுக்குதல்

(2) தொட்டுப் பார்த்தல் மற்றும் சுற்றுப் புறத்தில் உள்ள தாவரங்களை, இலைகளை ஒடித்தல்

(3) அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்

17. பல்லாங்குழி விளையாட்டுக்குத் தேவையானவை

(1) பந்தும் தடியும்

(2) குழிகள் உள்ள பலகையும் குன்றிமணி வித்துக்களும்

(3) தட்டையான ஓட்டுத்துண்டும் கயிறும்

18. முதன்மை வர்ணங்கள் (பிரதான வர்ணங்கள்) மூன்றும் எவை?

(1) நீலம், சிவப்பு, மஞ்சள் (2) நீலம், பச்சை, கபிலம் (3) பச்சை, சிவப்பு, மஞ்சள்

19. பண்டைய அரசர்களினால் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனக் கைத்தொழில் மூலம் எமது நாட்டில் பிரதானமாகச் செய்யப்படும் ஓர் உற்பத்தி

(1) தேயிலை (2) உப்பு (3) அரிசி

20. மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்தவர்

(1) துட்டகைமுனு மன்னன் (2) மகாசேன மன்னன் (3) தேவநம்பியதீச மன்னன்

21. நீல நிறத்தையும் சிவப்பு நிறத்தையும் கலந்து உண்டாக்கப்படும் நிறம்

(1) கபிலம் (2) கறுப்பு (3) ஊதா

22. மன்னன் பண்டுகாபயன் கட்டுவித்த குளம்

(1) கலாவாவி (2) கந்தளாய்க் குளம் (3) பசவக் குளம் (அபயவாவி)

23. எம்பக்க தேவாலயம் எது தொடர்பாகப் பிரசித்தி பெற்றது?

(1) மரச் செதுக்கல் வேலைப்பாடுகள் (2) பொம்மலாட்டக்கலை

(3) கற்செதுக்கல் வேலைப்பாடுகள்

24. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனித நகர்

(1) அநுராதபுரம் (2) சீகிரியா (3) காலி

www.ikeou.lk

25. உபகரணங்கள் இன்றி விளையாடப்படும் கிராமிய விளையாட்டு
(1) தாயம் போடுதல் (2) சடுகுடு (3) பல்லாங்குழி

26. யாழ்ப்பாணக் கோட்டையை முதலில் அமைத்தவர்கள்
(1) ஆங்கிலேயர் (2) ஒல்லாந்தர் (3) போர்த்துக்கேயர்

27. செதுக்கப்பட்ட விலங்குகளின் வரிசையைக் கொண்ட மிகச் சிறந்த கலைப்படைப்பு
(1) தொல்பொருளியல் இலச்சினை (2) கல்லேடு (3) சந்திரவட்டக்கல்

28. இலங்கையின் தேசிய கீதம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் **பிழையானது** எது?
(1) தேசிய கீதத்தை இயற்றியவர் ஆனந்த சமரகோன் ஆவார்
(2) தேசிய கீதத்தின் முதல்வரி 'சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா' என்பதாகும்
(3) தேசிய கீதத்தைப் பாடும் போது, எழுந்து கண்களை மூடியபடி நிற்க வேண்டும்

29. தேசியக் கீதத்தைப் பாடுவது, தேசியக் கொடியை
(1) ஏற்றுவதற்கு முன் (2) ஏற்றும் போது (3) ஏற்றிய பின்

30. தேசியக் கீதத்தைப் பாடி முடித்ததும் செய்ய வேண்டியது
(1) கரகோசம் செய்தல் (2) நின்ற இடத்தில் நின்றவாறு துள்ளுதல்
(3) தலையைத் தாழ்த்தி மரியாதை செய்தல்

31. தேசிய கீதத்தைப் பாடும் போது உடலை வைத்திருக்க வேண்டிய சரியான நிலை **அல்லாதது**
(1) கவனமாக நிற்றல் (2) இலகுவாக நிற்றல்
(3) தலையை நேராக வைத்து முன்னால் உள்ள இலக்கொன்றை நோக்கியவாறு நிற்றல்

32. தேசியக் கொடியில் **காணப்படாத** நிறங்கள்
(1) ஊதா, நீலம் (2) பச்சை, செம்மஞ்சள் (3) மஞ்சள், சிவப்பு

33. தேசிய கீதம் இசைக்கப்படும் போது நாம் கைகளை வைத்திருக்க வேண்டிய சரியான முறை எது?
(1) கைகளைப் பின்னால் கட்டிக் கொள்ளுதல்
(2) கைகளை மார்பில் வைத்துக் கட்டிக் கொள்ளுதல்
(3) கைவிரல்களை மடித்து, பெருவிரல் நிலத்தை நோக்கி அமையுமாறு உடலுடன் கைகளை ஒட்டி இருக்குமாறு வைத்துக் கொள்ளுதல்

34. தேசிய கீதம் இசைக்கும் போது எமது தலையை
(1) நிலத்தை நோக்கி வைத்திருத்தல் வேண்டும்
(2) நேராக முன்னோக்கி வைத்திருத்தல் வேண்டும்
(3) இடப் பக்கமாகத் திருப்பி வைத்திருத்தல் வேண்டும்

35. எமது நாட்டின் பிரசைகள் ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது
(1) பெப்ரவரி - 4 இல் (2) மே - 1 இல் (3) ஏப்ரல் - 14 இல்

36. பன்சல, மஸ்ஜித், தேவாலயம், கோயில் ஆகிய ஒவ்வொரு சமயத் தலத்துடனும் தொடர்புடைய பண்டிகைகளை ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?
(1) நவராத்திரி, றம்ழான், வெசாக், நத்தார்
(2) வெசாக், றம்ழான், நத்தார், நவராத்திரி
(3) வெசாக், நவராத்திரி, றம்ழான், நத்தார்

37. இலங்கையின் தேசியக் குறியீடுகளில் ஒன்று
(1) நீலோற்பலம் (2) நிறைகுடம் (3) தர்மச்சக்கரம்

www.ikeedu.lk

38. 

படத்தில் காட்டப்பட்டுள்ள இனத்தவர்கள் யார்?

(1) தமிழர்கள்
(2) சிங்களவர்கள்
(3) முஸ்லிம்கள்

39. தேசியக் கொடியில் உள்ள செம்மஞ்சள், பச்சை நிறப் பட்டிகள் குறிப்பது
(1) சிங்கள இன மக்களை (2) தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இன மக்களை
(3) நாட்டில் வாழும் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை

40. இரக்கம், காருண்யம், திருப்தி, பற்றின்மை ஆகிய நான்கு பண்புகளையும் குறிப்பதற்கு, தேசியக் கொடியில் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடு
(1) நான்கு அரச இலைகள் (2) சிவப்பு நிறப் பின்னணி (3) சிங்க உருவம்

41. இலங்கையின் தேசியக் கொடியைச் சுற்றிவர இடப்பட்டிருக்கும் மஞ்சள் நிறப்பட்டி குறிப்பது
(1) சமுத்திரத்தினால் சூழப்பட்ட நாடு என்பதை
(2) நாட்டில் நான்கு பிரதான இனமக்கள் உள்ளனர் என்பதை
(3) இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை

42. அரச இலச்சினையில் உள்ள சூரியன், சந்திரனால் காட்டப்படுவது
(1) நித்திய நிலைத்திருப்பு (2) தார்மீகம் (3) தன்னிறைவும் செழிப்பும்

43. அரச இலச்சினையில் சௌபாக்கியமும், பொலிவும் என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருப்பது
(1) நெற்கதிர் (2) நிறைகுடம் (3) தர்மச் சக்கரம்

44. அரச இலச்சினையில் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் காணப்படும் குறியீடும், அக்குறியீட்டினால் குறிக்கப்படுவதும் யாவை?
(1) வாளேந்திய சிங்கம் - நாடும் கட்டுப்பாடான மக்களும்
(2) நெற்கதிர் - தன்னிறைவும் செழிப்பும்
(3) தர்மச்சக்கரம் - தார்மீகம்

45. இலங்கையின் தேசியக் கொடி, அரச இலச்சினை ஆகிய இரண்டிலும் காணப்படும் குறியீடு எது?
(1) அரச இலைகள் (2) பூவிதழ்கள் (3) வாளேந்திய சிங்கம்

46. "தன்னிறைவான ஒரு நாட்டில் சூரியனும், சந்திரனும் இருக்கும் காலமெல்லாம் அறத்தைப் பாதுகாத்தவாறு மக்கள் யாவரும் தழைத்தோங்கட்டும்" என்னும் ஒட்டுமொத்தக் கருத்தை வெளிப்படுத்துவது இலங்கையின்
(1) தேசிய கீதம் (2) அரச இலச்சினை (3) தேசியக்கொடி

47. இலங்கையின் தேசியப் பறவை, தேசிய மரம் என்பவற்றை முறையே காட்டும் விடை எது?
(1) மயில், நாகமரம் (2) காட்டுக்கோழி, நாகமரம்
(3) காட்டுக்கோழி, கொன்றை மரம்

48. மே மாதத்தில் கொண்டாடப்படும் பௌத்தர்களின் பண்டிகை
(1) சிங்களப் புத்தாண்டு (2) பொசன் (3) வெசாக்

49. 'வொலிபோல்' அணி ஒன்றில் இடம்பெறும் வீரர்களின் எண்ணிக்கை
(1) 5 (2) 6 (3) 7

50. ஆங்கில ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்தது
(1) 1972 இல் (2) 1948 இல் (3) 1945 இல்

www.ikeou.lk

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2022

## சுற்றாடல் சார் செயற்பாடுகள் 2

5

45 புள்ளிகள்

சுட்டெண்:.....

1 மணித்தியாலம்

● சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோட்டிடுக

1. இலங்கையின் அரச இலச்சினையில் **காணப்படாத** குறியீடு
   (1) பூவிதழ்கள் (2) அரச இலை (3) நிறைகுடம்

2. கலைத்துவப் பெறுமானமுள்ள சீகிரியாக் குன்று அமைந்துள்ள மாகாணம்
   (1) மத்திய மாகாணம் (2) சப்ரகமுவ மாகாணம் (3) வடமத்திய மாகாணம்

3. தேசிய கீதம் இசைப்பதன் நோக்கம் யாது?
   (1) இசையை இரசித்தல் (2) குரலினிமையை வெளிப்படுத்தல் (3) நாட்டை கௌரவித்தல்

4. ஆதிவாசிகளுடன் தொடர்புடைய ஊர்வலம்
   (1) மிஹிந்து ஊர்வலம் (2) கதிர்காம ஊர்வலம் (3) தலதா ஊர்வலம்

5. வீட்டு முற்றத்தில் 'கோலமிடும்' அலங்காரச் செயற்பாட்டினை மேற்கொள்பவர்கள்
   (1) தமிழர்கள் (2) முஸ்லிம்கள் (3) சிங்களவர்கள்

6. இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி
   (1) துன்ஹிந்த (2) தியலுமை (3) பம்பரகந்த

7. ஜூன் மாதத்தில் கொண்டாடப்படும் பௌத்தர்களின் பண்டிகை
   (1) எசல (2) பொசன் (3) வெசாக்

8. நத்தார்ப் பண்டிகை கொண்டாடப்படுவது
   (1) ஜனவரி மாதத்தில் (2) ஏப்ரல் மாதத்தில் (3) டிசம்பர் மாதத்தில்

9. இலங்கை, பிரித்தானியர்களால் முழுமையாகக் கைப்பற்றப்பட்டது
   (1) 1815 இல் (2) 1796 இல் (3) 1505 இல்

10. இழக்கப்பட்ட அடையாள அட்டை பற்றிய முறைப்பாட்டினைப் பதிவு செய்தல், துவிச்சக்கர வண்டிக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுதல், வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரதியைப் பெறுதல் ஆகிய அலுவல்களுக்காகச் செல்ல வேண்டிய இடங்கள் முறையே
    (1) பொலிஸ் நிலையம், பிரதேச சபை, மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம்
    (2) பொலிஸ் நிலையம், பிரதேச செயலகம், பிரதேச சபை
    (3) பிரதேச சபை, பொலிஸ் நிலையம், மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம்

11. வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெறச் செல்ல வேண்டியது
    (1) பாடசாலை அதிபரிடம் (2) சமுர்த்தி அலுவலரிடம் (3) கிராம அலுவலரிடம்

12. தபால் நிலையத்தில் நாம் பெறக்கூடிய ஒரு சேவை
    (1) சர்சோலையை வைப்பிலிடல்
    (2) காசுக்கூட்டளையைப் பெறல்
    (3) வியாபார அனுமதிப்பத்திரத்தைப் பெறல்

www.lkedu.lk

13. நாக மரத்தின் தளிர்களின் நிறம் எது?
(1) இளம் பச்சை (2) இளஞ்சிவப்பு (3) கடும்பச்சை

14. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
(1) எல்லே (2) கிரிக்கட் (3) வொலிபோல்

15. இலங்கைக்கு முதன் முறையாக ஒலிம்பிக் பதக்கம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தவர் யார்?
(1) டங்கன் வைட் (2) சுசந்திகா ஜயசிங்க (3) ஜூலியன் போலிங்

16. இல்லத்திற்குக் குழாய் நீர் வசதியைப் பெறச் செல்ல வேண்டிய இடம்
(1) பிரதேச செயலகம்
(2) நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை
(3) இலங்கை மின்சார சபை

17. தேசிய மரபுரிமையாகவும் உலக மரபுரிமையாகவும் கணிப்புப் பெற்றுள்ள இடம்
(1) சீகிரியா (2) சேருவில மங்கள ரஜமகாவிகாரை (3) யால சரணாலயம்

18. பின்வருவனவற்றில் உலக மரபுரிமை எனப் பெயரிடப்பட்டுள்ள இடங்களை மாத்திரம் கொண்டுள்ள விடை எது?
(1) தலதா மாளிகை, காலிக்கோட்டை
(2) பேராதனை தாவரவியற் பூங்கா, சீகிரியா
(3) இலங்கையின் மத்திய மலைப்பகுதிகள், யால தேசிய வனம்

19. இலங்கையின் தேசிய மரபுரிமையாகக் கொள்ளப்படும் புனித நூல்
(1) பகவத் கீதை (2) பைபிள் (3) திரிபீடகம்

20. அம்பலாங்கொடைப் பிரதேசம் பின்வருவனவற்றில் எதற்குப் பிரசித்தி பெற்றது?
(1) பாரம்பரிய வேடமுகக் கலைக்கு
(2) பிரம்புக் கைத்தொழிலுக்கு
(3) றம்புட்டான் பழ உற்பத்திக்கு

21. தற்போது இலங்கையில் அரக்குக் கைத்தொழிலுக்குப் புகழ் பெற்ற இடமாக விளங்குவது
(1) காலி (2) மட்டக்களப்பு (3) மாத்தளை

22. அரக்குக் கைத்தொழிலின் போது அரக்கினால் எவ்வகைப் பொருள்களின் மேற்பரப்புக்கள் அலங்கரிக்கப்படுகின்றன?
(1) மரத்தால் ஆன பொருள்கள் (2) பிளாஸ்ரிக் பொருள்கள் (3) கண்ணாடிப் பொருள்கள்

23. தேசிய மரபுரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதன் மூலம்
(1) நாட்டின் தனித்துவம் பாதுகாக்கப்படும்
(2) பண்பாட்டைச் சந்ததி சந்ததியாகக் கையளிக்க முடியாது போகும்
(3) பண்பாட்டுப் பெறுமானம் நாளுக்கு நாள் குறைவடையும்

24. கண்டியில் அபிசேகம் செய்யப்பட்ட மன்னன் எனவும் 1948 இல் விடுதலைப் போராட்டத்தை ஒழுங்கு செய்து நடத்திய வீரர் எனவும் இலங்கை வரலாற்றில் இடம் பிடித்த தேசிய வீரர்
(1) வண. எஸ். மஹிந்த (2) டீ.எஸ். சேனாநாயக்க (3) கொங்காலேகொட பண்டா

25. நாகமரப் பூவின் நிறம்
(1) வெள்ளை (2) மஞ்சள் (3) இளஞ்சிவப்பு

www.ikeduk

26. ஆங்கில ஆட்சியாளர்களால் மரண தண்டனை விதிக்கப்பட்ட போது அதைத் தைரியமாக எதிர்கொண்ட தேசிய வீரர்

(1) மொனராவில கெப்பெட்டிப் பொல திசாவ
(2) கேர்னல் ஒல்கொட்
(3) டீ.எஸ். சேனாநாயக்க

27. கொழும்பில் வெள்ளரச மரங்களை வெட்டும் ஆங்கில ஆட்சியாளரின் முடிவுக்கு எதிராகப் போராடியவர்களுள் பிரதானமானவர்

(1) வண. மிக்கட்டுவத்தே குணானந்த
(2) டட்லி சேனாநாயக்க
(3) எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க

28. பின்வருவனவற்றுள் எது டீ.எஸ். சேனாநாயக்க அவர்கள் பற்றிய கூற்று **அல்லாதது**

(1) சுதந்திர இலங்கையின் முதற் பிரதமர்
(2) கல்லோயாத் திட்டத்தைத் தொடக்கி வைத்தவர்
(3) மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்தவர்

29. பின்வருவனவற்றுள் எது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றின் சேவையாகும்?

(1) தேசிய அடையாள அட்டைக்காகத் தகவல்களை வழங்குதல்
(2) பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களைப் பதிவு செய்தல்
(3) சூழலில் உள்ள குப்பை கூளங்களை உரியவாறு அப்புறப்படுத்தல்

30. இல்லத்துக்கான மின்சார இணைப்பைப் பெற, செல்ல வேண்டிய இடம்

(1) கிராம அலுவலர் காரியாலயம்
(2) இலங்கை மின்சார சபை
(3) பிரதேச சபை

31. இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குள் **மாத்திரம்** அடங்குபவை

(1) மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம்
(2) மாநகர சபை, மாவட்டச் செயலகம்
(3) நகர சபை, பிரதேச சபை

32. கர்ப்பிணித் தாய்மார்களை அவர்களின் வீடுகளுக்குச் சென்று பரிசோதித்தல், ஆலோசனை வழங்குதல் ஆகிய சேவைகளை வழங்குபவர்

(1) சமுர்த்தி அலுவலர்
(2) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
(3) குடும்ப சுகாதார உத்தியோகத்தர்

33. மண்ணினுள் சேரும் பின்வரும் எப்பொருள் **உக்காதது**?

(1) கடதாசி
(2) பிளாஸ்ரிக் மூடி
(3) வாழைப்பழத் தோல்

34. சூழல் மாசடைதல் குறைவடைவது

(1) ஞாயிற்றுக் கலங்கள் மூலம் மின்சக்தி பெறும் போது
(2) நிலக்கரி மூலம் அனல் மின்சக்தி நிலையம் இயங்கும் போது
(3) பெட்ரோல், டீசல் ஆகியவற்றைப் பயன்படுத்தி வாகனங்கள் செலுத்தப்படும் போது

35. பொலிதீன் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் **பிழையானது**

(1) பொலிதீன் விரைவாக உக்குவதற்கு மண் உதவுகிறது
(2) பொலிதீனை எரிக்கும் போது வெளியேறும் நச்சுவாயு நோய்களை உண்டாக்குகிறது
(3) கைவிடப்பட்ட உணவு உள்ள பொலிதீனை உண்பதால் விலங்குகள் இறக்கின்றன

www.ikeou.lk

36. வேலையொன்றைச் செய்யும் போது பதற்றத்தையும் நேரவிரயத்தையும் தவிர்ப்பதற்கு அவ்வேலையை
(1) உரிய வேளையில் உரிய நேரத்தில் செய்து முடிக்க வேண்டும்
(2) கடைசி நேரத்தில் அவசரம் அவசரமாகச் செய்து முடிக்க வேண்டும்
(3) விரும்பிய ஏதேனும் ஒரு நேரத்தில் செய்து முடிக்க வேண்டும்

37. நடு நிலைமையான நடத்தை மூலம் கருத்துக்களை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாக அமைவது
(1) மரியாதையாகச் சொற்களையும் முகபாவங்களையும் பயன்படுத்தல்
(2) ஆளுக்கு எதிராகப் பயன்படுத்தப் பழகியுள்ள சொற்களைப் பயன்படுத்தல்
(3) ஆட்களின் மனதைத் தாக்கும் வகையிலான சொற்களைப் பயன்படுத்தல்

38. எளிமையானவற்றையும் வாழ்வுக்கு அத்தியவசியமானவற்றையும் மாத்திரம் தெரிவு செய்து வாழப்பழகுவதால்
(1) ஓய்வும், பாதுகாப்பும் கிடைக்கும்
(2) வழிதவறிப் போக நேரிடும்
(3) வாழ்க்கை சிக்கல் தன்மை பெறும்

39. பிறருக்கு அசௌகரியம் ஏற்படாமல் நாம் நடந்து கொள்ளத் தக்க நடத்தை எது?
(1) அழுக்கான உடைகளுடன் சனநெரிசல் உள்ள பொது இடங்களில் சஞ்சரித்தல்
(2) வீதியில் விளையாடுதல்
(3) வாகன நெரிசல் உள்ள பெருந்தெருவில் வீதியைக் கடக்க பாதசாரிகள் கடவையைப் பயன்படுத்தல்

40. தினமும் போதிய அளவு நீர் **அருந்தாத** ஒருவருக்கு ஏற்படக்கூடிய விளைவுகளாவன
(1) உடல் தளர்ச்சி நீங்குதல், உடற் கொழுப்பு குறைவடைதல்
(2) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல், உதடுகளும் தொண்டையும் உலர்தல்
(3) சரும நோய்களுக்கு ஆளாவது குறைவடைதல், தோல் பூரிப்பாதல்

41. சூரிய நமஸ்காரச் செயற்பாட்டின் சந்தர்ப்பங்கள் எத்தனை?
(1) 10 (2) 11 (3) 12

42. சூரிய நமஸ்காரச் சந்தர்ப்பங்களில் ஒரே வகையான மெய்ந்நிலைகளைக் **கொண்டிராத** சந்தர்ப்பங்கள்
(1) 5 உம் 8 உம் (2) 2 உம் 11 உம் (3) 3 உம் 10 உம்

43. உடல், உள சுகத்திற்காகச் செய்யப்படும், மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளின் ஐந்து படிமுறைகளையும் ஒழுங்கு முறையில் காட்டும் விடை
(1) உள்ளத்தைத் தளர்த்துதல், உடலைத் தளர்த்துதல், மனவுறுதி (திடசித்தம்), மலர்வு(உதிப்பு), பிரார்த்தனை
(2) உடலைத் தளர்த்துதல், உள்ளத்தைத் தளர்த்துதல், மனவுறுதி (திடசித்தம்), பிரார்த்தனை, மலர்வு (உதிப்பு)
(3) உடலைத் தளர்த்துதல், உள்ளத்தைத் தளர்த்துதல், உதிப்பு (மலர்வு), பிரார்த்தனை, மனவுறுதி (திடசித்தம்)

44. "எனது உள்ளம் அமைதியுறுவதால் கிடைக்கும் நிம்மதியை உணரட்டும்!" என எண்ணிப் பார்க்கப்படுவது மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் எத்தனையாம் படிமுறையில் ஆகும்?
(1) மூன்றாம் (2) நான்காம் (3) ஐந்தாம்

45. இலங்கை நாட்டின் செழுமையை நீக்கும் நோக்குடன் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களால் எரித்து அழிக்கப்பட்ட தாவர வகை எது?
(1) வாகை மரம் (2) மருத மரம் (3) இலுப்பை மரம்

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2022
## சுற்றாடல் சார் செயற்பாடுகள் 3

5

50 புள்ளிகள்

கூட்டெண்:.....

1 மணித்தியாலம்

● ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

1. பின்வருவனவற்றுள் இலைகள், பூக்கள் போன்ற தாவரப் பகுதிகளின் பல்வேறு பண்புகளை அவதானிப்பதற்கு மிகப் பொருத்தமான உபகரணம் எது?
   (1) தொலைக்காட்சி (2) துளைக்கமரா (3) கைவில்லை

2. புற்கள் உள்ள தரையொன்றைத் தென்னஞ் சிரட்டையினால் மூடிவைத்து சில நாட்களின் பின் சிரட்டையை அகற்றிப் பார்க்கும் போது புற்கள் காணப்படுவது,
   (1) கபில நிறத்தில் (2) மஞ்சள் நிறத்தில் (3) கடும்பச்சை நிறத்தில்

3. ஆணிவேரைக் கொண்டுள்ள தாவரங்கள்,
   (1) மிளகாய்ச்செடி, பப்பாசி (2) வாழை, தென்னை (3) கமுகு, கரும்பு


4. ஒரே வடிவம் உள்ள இலைகளை உடைய தாவரங்களைக் கொண்ட விடை எது?
   (1) புளி, அகத்தி, தொட்டாச்சுருங்கி
   (2) வெண்டி, பலா, அகத்தி
   (3) கத்தாப்பு, வெண்டி, கரும்பு

5. ஆமணக்கு இலையின் வடிவத்தை ஒத்த இலை உள்ள தாவரம்,
   (1) மூங்கில் (2) பப்பாசி (3) வெற்றிலை

6. பின்வருவனவற்றுள் அகத்தி தாவரத்தின் உருவைக் காட்டுவது எது?


(1)


(2)


(3)

7. முட்களைக் கொண்டுள்ள தாவர இலை,
   (1) தோடை (2) தர்ப்பைப் புல் (3) வட்டுக்கத்தரி

8. இரவு நேரத்தில் இலைகள் சுருங்கும் தாவரம்
   (1) முருங்கை (2) அகத்தி (3) கறிவேப்பிலை

9. இரவில் மலரும் பூக்கள் **மாத்திரம்** அடங்கியுள்ள விடை
   (1) பவளமல்லிகை, அலரி (2) அலரி, ரோசா (3) கடுபுல், பவளமல்லிகை

10. தாவரங்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் **பிழையானது** எது?
    (1) தாவரத்தின் பூக்கள் அத்தாவரத்தின் ஆயுட்காலத்தைக் கூட்டுகின்றன.
    (2) நிலத்தில் வளரும் தாவரமொன்று வேர்களின் மூலமாக நீரையும் பசளையையும் பெறுகிறது.
    (3) தாவரங்களில், பிரதானமாக இலைகளின் மூலம் உணவு உற்பத்தி செய்யப்படுகிறது.

www.ikedu.lk

11. இலுப்பை கொன்றை ஆகிய தாவரங்கள் பூப்பது,
(1) மாசி மாதத்தில் (2) வைகாசி மாதத்தில் (3) ஆவணி மாதத்தில்

12. சித்திரை மாதத்தில் பூப்பூக்கும் தாவரங்கள்,
(1) வேம்பு, முள்முருக்கு (2) மா, நாவல் (3) பிறைப்பூ, வாகை

13. வருடத்தின் குறித்த காலத்தில் மாத்திரம் காய்ப்பது,
(1) கொய்யா (2) அன்னாசி (3) மரமுந்திரிகை

14. ஒரு குறித்த காலத்தில் **அன்றி** வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவரம்,
(1) தென்னை (2) பாலை (3) இறப்பர்

15. மாலையில் மலரும் ஒரு பூவையும் இரவில் மலரும் ஒரு பூவையும் முறையே காட்டும் விடை,
(1) அந்திமந்தாரை, பவளமல்லிகை
(2) அந்திமந்தாரை, தாமரை
(3) கடுபுல், குவளை

16. வாசனை மிக்க பூ,
(1) அந்தூரியம் (2) போகன்விலா (3) பவளமல்லிகை

17. கிளைகளிலும் தண்டிலும் காய்கள் உண்டாக்கும் தாவரம்,
(1) மங்குஸ்தான் (2) பலா (3) இறப்பர்

18. ஒளடதப் பூப்பான்ம தயாரிப்பதற்கு உகந்த பூக்கள்,
(1) வில்வம், ஆவரசு (2) அகத்தி, முள்முருக்கு (3) முள்முருக்கு, அவரை

19. பின்வரும் எத்தாவரத்தின் இலையும் பூவும் உணவு சமைக்கப் பயன்படுகின்றன?
(1) செவ்வரத்தை (2) அகத்தி (3) வில்வம்

20. பூ பற்றிய பின்வரும் கூற்றுக்களில் **சரியானது** எது?
(1) காயாக மாறும் பூவின் பகுதி சூலகம் ஆகும்.
(2) எல்லாப் பூக்களிலும் கேசரங்கள் காணப்படும்.
(3) எல்லாப் பூக்களிலும் காயாக வளர்ச்சியடையும் பூவின் பகுதி இதழ்களுக்கு மேலே காணப்படும்.

21. கொடிகளில் காய்க்கும் பழம்,
(1) விளா (2) பப்பாசி (3) திராட்டை


22. பின்வருவனவற்றுள் பூக்கும் தாவரம்,
(1) கற்றாளை (2) பாசி (3) பன்னம்

23. நான்கு இதழ்கள் உள்ள மலர்களுக்கு உதாரணம்,
(1) பவளமல்லிகை, மல்லிகை (2) வில்வம், நாகமலர் (3) காட்டுமல்லிகை, மல்லிகை

24. பூக்களில் தேன் பருக வருவது
(1) சிலந்தி (2) வெட்டுக்கிளி (3) தேனீ

25. தேனீக்களால் தாவரங்களுக்குக் கிடைக்கும் பயன்,
(1) தாவர வித்துக்கள் பரம்பலடைய உதவுதல்
(2) தாவரங்களுக்குத் தீங்கு தரும் பிராணிகளை அழித்தல்
(3) பூக்களில் மகரந்தச் சேர்க்கை இடம் பெற உதவுதல்

www.ikedu.lk

26. 


பூவின் படத்தில் A.B.C ஆகிய எழுத்துக்களுக்குரிய பகுதிகள் முறையே எவை?

(1) குறி, தம்பம், சூலகம்
(2) குறி, அல்லி, புல்லி
(3) கேசரம், குறி, சூலகம்

27. இதழ்களின் எண்ணிக்கை சமமாக உள்ள பூக்கள்,

(1) நாகமலர், பவளமல்லிகை (2) வெட்சி, மல்லிகை (3) நந்தியாவட்டை, செவ்வரத்தை

28. ஆறு இதழ்களை உடைய வெள்ளை நிறமான பூ எது?

(1) பவளமல்லிகை (2) நந்தியாவட்டை (3) வெட்சி

29. கால வேறுபாடுகளின்றிப் பூப்பூக்கின்ற தாவரத்தையும் குறித்த ஒரு காலத்தில் மாத்திரம் பூப்பூக்கின்ற தாவரத்தையும் ஒழுங்கு முறைப்படி குறிப்பிடும் விடை எது?

(1) வாழை, நம்புட்டான் (2) நம்புட்டான், முள்முருக்கு (3) செவ்வரத்தை, வாழை

30. 

உருவில் காட்டப்பட்டுள்ள தாவரம்,

(1) சாத்தாவாரி
(2) திப்பிலி
(3) முடக்கற்றான்

31. கீழே தரப்பட்டுள்ள பூக்களில் ஆவரசுப் பூவைக் காட்டுவது,


(1)


(2)


(3)

32. வெட்சி, ரோசா போன்ற பூங்கன்றுகளில் எக்கிளைகளில் அதிக பூக்கள் பூக்கும்?


(1) நேரடியாக சூரிய ஒளி கிடைக்கும் கிளைகளில்
(2) சூரிய ஒளி படாது வளர்க்கப்படும் கிளைகளில்
(3) ஓரளவு சூரிய ஒளி கிடைக்கும் கிளைகளில்

33. பின்வருவனவற்றில் நாக மரத்தின் இலையைக் காட்டுவது,


(1)


(2)


(3)

34. 

இவ்வுருவில் உள்ளவாறு வீட்டு முற்றத்தில் கட்டங்கள் வரையப்பட்டு விளையாடப்படும் விளையாட்டு,

(1) உப்புக்காவுதல் (2) சடுகுடு (3) கட்டம் பாய்தல்

35. தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணிகள்,

(1) ஆந்தை, பருந்து (2) தேனீ, வண்ணத்துப்பூச்சி (3) நத்தை, மயிர்க்கொட்டி

www.ikedu.lk

36. தாவரங்களுக்குப் பிராணிகள் செய்யும் நன்மையான செயல்,
(1) வௌவால்கள் பழங்களை உண்டபின் வித்துக்களை வெவ்வேறு இடங்களில் போடுதல்
(2) முள்ளம்பன்றிகள் தாவரங்களின் கிழங்குகளையும் வேர்களையும் உண்ணுதல்
(3) சில பிராணிகள் காடுகளில் உள்ள தாவரங்களை வீழ்த்துதல்

37. தாவர இலைகளை வளைத்துச் சுருட்டிக் கூடு அமைக்கும் பிராணி,
(1) கொக்கு (2) கரப்பான் (3) செவ்வெறும்பு

38. பூக்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெற உதவும் ஒரு பிராணி,
(1) கரப்பான் (2) வௌவால் (3) வண்ணத்துப்பூச்சி

39. கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இலைகளை **மாத்திரம்** கொண்ட விடை எது?
(1) நெல்லி, அகத்தி (2) கோப்பைஇலை, பப்பாசி (3) வல்லாரை, சாத்தாவாரி

40. அரும்பாக (மொட்டாக) இருக்கும் போது பூவைப் பாதுகாக்கும் பூவின் பகுதி,
(1) அல்லி (2) புல்லி (3) தம்பம்

41. தாவரப் பரம்பலுக்கு உதவும் விலங்கு,
(1) பருந்து (2) வௌவால் (3) ஆந்தை

42. அணில் தாவரத்தின் எப்பகுதியை உணவாக உட்கொள்ளும்?
(1) தண்டை (2) இலையை (3) பழத்தை

43. பிராணிகளால் தாவரங்களுக்கு ஏற்படும் தீங்காக அமைவது,
(1) ஆடு, மாடு என்பன தாவரங்களுக்கு அடியில் மலசலம் கழித்தல்
(2) பிராணிகள் தாவரப் பகுதிகளை உண்ணுதல்
(3) சில பிராணிகள் பூக்களில் தேன் பருகுதல்

44. ஒளடதமாகப் பயன்படும் தாவர இலைகள்,
(1) வில்வம், பொன்னாவரை (2) கறிவேப்பிலை, சாத்தாவாரி (3) பொன்னாவரை, கோப்பி

45. செடி வகைத் தாவரம் ஒன்றையும் கொடி வகைத் தாவரம் ஒன்றையும் ஒழுங்குமுறைப்படி காட்டும் விடை எது?
(1) பீர்க்கு, பாகல் (2) கத்தரி, தக்காளி (3) மிளகாய், புடோல்

46. வேர்களினால் தாவரங்களுக்குக் கிடைக்கும் பயன் **அல்லாதது**,
(1) தாவரத்தை நிலத்துடன் பிணைத்து வைத்திருத்தல்
(2) நிலத்திலிருந்து நீரையும் பசளையையும் உறிஞ்சுதல்
(3) உணவைத் தயாரித்தல்

47. ஒரு வித்தினை மாத்திரம் கொண்டுள்ள பழங்கள்,
(1) பப்பாசி, விளா (2) றம்புட்டான், நெல்லி (3) கொய்யா, மாதுளை

48. தண்டில் கிளைகளைக் கொண்டுள்ள தாவரம்,
(1) கித்துள் (2) கமுகு (3) மா

49. பூசணிப் பூவின் நிறம்,
(1) வெள்ளை (2) ஊதா (3) மஞ்சள்

50. பெரும்பாலும் ஆடைகளில் அல்லது விலங்குகளின் உடல்களில் ஒட்டிப் பரம்பலடையும் வித்து,
(1) காசித்தும்மை (2) எருக்கலை (3) துத்திரி

www.ikeou.lk














# Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

**+94 767573 559**

FB Page - https://www.facebook.com/lebslk

## இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

**www.lkedu.lk**

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2022

## சுற்றாடல் சார் செயற்பாடுகள் 4

5

45 புள்ளிகள்

சுட்டெண்:..... 1 மணித்தியாலம்

● சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

1. நீரினாலும் காற்றினாலும் பிராணிகளினாலும் முறையே பரம்பும் வித்துக்கள் அடங்கியுள்ள விடை,
   (1) காசித்தும்பை, சீதேவியார் செங்கழுநீர், இறப்பர்
   (2) தேங்காய், மரமுந்திரிகை, பருத்தி
   (3) கடல்மாங்காய், எருக்கலை, மரமுந்திரிகை

2. வெடித்தல் மூலம் பரம்பலடையும் வித்துக்களை **மாத்திரம்** கொண்ட தாவரங்கள்
   (1) வெண்டி, இறப்பர், குன்றிமணி
   (2) சோளம், பாக்கு, இலவம்பஞ்சு
   (3) எருக்கலை, சீதேவியார் செங்கழுநீர், முருங்கை

3. காற்றின் மூலம் பரம்பல் அடையும் தாவரம்
   (1) துத்திரி (2) எருக்கலை (3) கொய்யா

4. விலங்குகளின் மூலம் பரம்பல் அடையும் வித்துக்கள் **மாத்திரம்** இடம்பெறும் விடை எது?
   (1) புலிநகம், பப்பாசிப்பழம், ஆமணக்கு
   (2) காசித்தும்பை, இலவம்பஞ்சு, முடக்கொத்தான்
   (3) மஞ்சாடி, முருங்கை, மகோகனி

5. எண்ணை, மாம்பழம், தேங்காய் என்னும் வித்து வகைகள் பரம்பல் அடைவது முறையே
   (1) காற்றின் மூலம், நீரின் மூலம், விலங்குகளின் மூலம்
   (2) காற்றின் மூலம், விலங்குகளின் மூலம், நீரின் மூலம்
   (3) நீரின் மூலம், விலங்குகளின் மூலம், காற்றின் மூலம்

6. மிண்டி வேர்களைக் கொண்டுள்ள தாவரங்கள்
   (1) வாழை, கித்துள் (2) ஆல், மிளகாய் (3) நம்பை, தாழை

7. தாங்கும் வேர்களைக் கொண்டுள்ள தாவரம்
   (1) மா (2) ஆல் (3) தென்னை

8. நீரிழப்பைக் குறைப்பதற்காக ஒடுங்கிய இலை அமைப்பைக் கொண்டுள்ள தாவரங்கள் பெரும்பாலும் காணப்படுவது
   (1) மத்திய மலைநாட்டுப் பகுதிகளில்
   (2) கண்டல் நிலப் பிரதேசங்களில்
   (3) வறண்ட நிலப் பகுதிகளில்

9. காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படத்தக்க விளைவுகளில் ஒன்று
   (1) சுத்தமான காற்றோட்டம் குறைவடையும்
   (2) மண் அரிப்புக் குறைவடையும்
   (3) சூழல், குளிர்ச்சியும் அழகும் பெறும்

10. இலங்கை நாட்டுக்கே உரித்தான தாவரங்கள் **மாத்திரம்** அடங்கியுள்ள விடையைத் தெரிவு செய்க
    (1) எண்ணை, மா, ஈரப்பலா
    (2) ஹீன்போவிட்டியா, கொடபறை, கெக்கட்டியா
    (3) நம்புட்டான், எண்ணை, ஆனைக்கொய்யா

www.ikedu.lk

11. வீட்டில் வளர்க்கப்படும் ஒரு பிராணியையும், வீட்டுச் சூழலில் காணப்படும் ஒரு பிராணியையும் முறையே காட்டும் விடை எது?
(1) கபரகொய்யன், குரங்கு (2) ஆடு, ஓணான் (3) பூனை, பசு

12. 
நிழல் உருவினால் காட்டப்பட்டுள்ள பறவை எது?
(1) இரட்டைச் சொண்டுக் குருவி
(2) தேன்சிட்டு
(3) மரங்கொத்தி

13. பின்வரும் எவ்விலங்கு பொருளாதார ரீதியில் பயன்தரும் ஒரு மருந்துப் பொருளை ஆக்குகிறது?
(1) வண்ணத்துப்பூச்சி (2) வெட்டுக்கிளி (3) தேனீ

14. தீங்கான பிராணிகளை அழித்தல், வித்துக்களைப் பரவச் செய்தல், சூழல் மாற்றத்தை அறிவித்தல் ஆகிய பயன்கள் எமக்குக் கிடைக்க உதவும் பிராணிகளை முறையே காட்டும் விடை எது?
(1) ஈசல், வண்ணத்துப்பூச்சி, தேனீ
(2) கபரகொய்யன், வௌவால், பருந்து
(3) கபரகொய்யன், பருந்து, சேவல்

15. ஊர்ந்து செல்லும் பிராணிகள் **மாத்திரம்** அடங்கும் விடை
(1) ஓணான், ஆமை (2) தவளை, முயல் (3) பல்லி, பூனை

16. குற்றவாளிகளைப் பிடித்தல், போதைப் பொருள்களைக் கண்டு பிடித்தல் என்பவற்றுக்காகப் போலீசார் பயிற்சியளித்துப் பயன்படுத்தும் பிராணியும் அப்பிராணியிடம் காணப்படும் விஷேட திறனும் எவை?
(1) பருந்து - கூர்மையான பார்வை
(2) நாய் - சிறந்த மோப்ப சக்தி
(3) உடும்பு - தெளிவாகக் காது கேட்டல்

17. மண்புழு, கறையான் ஆகியவற்றினால் மனிதருக்குக் கிடைக்கும் நன்மை
(1) சுற்றாடலை அழகுபடுத்தல்
(2) உணவை வழங்குதல்
(3) குப்பைகளை உக்கச் செய்தல்

18. நீண்ட நாக்கைப் பயன்படுத்தி இரையைப் பிடிக்கும் பிராணிகள் **மாத்திரம்** அடங்கும் விடை எது?
(1) பாம்பு, பல்லி, தவளை
(2) பச்சோந்தி, குரங்கு, ஆமை
(3) தவளை, குரங்கு, நத்தை

19. ஆமை, நத்தை, என்பன ஆபத்து ஏற்படுவதை உணர்ந்தவுடன் பாதுகாப்பிற்காக யாது செய்கின்றன?
(1) உடலை வட்டமாகச் சுருட்டிக் கொள்கின்றன
(2) ஓட்டினுள் ஒளிந்து கொள்கின்றன
(3) விசப் பற்களினால் எதிரியைத் தீண்டுகின்றன

20. பாதுகாப்பிற்காக உடலின் நிறத்தை மாற்றும் திறன் கொண்ட பிராணி
(1) பல்லி (2) ஆமை (3) பச்சோந்தி

21. நீர்வெறுப்பு நோயைப் பரப்பக்கூடிய பிராணிகள் **மாத்திரம்** அடங்கியுள்ள விடை எது?
(1) எலி, நுளம்பு (2) கரப்பான், வீட்டு ஈ (3) நாய், பூனை

www.ikeou.lk

22. கழிச்சல் நோயைப் பரப்பும் பிராணி

(1) நுளம்பு (2) இலையான் (3) அணில்

23. நுளம்பின் மூலம் பரவும் நோய்கள்

(1) ஆனைக்கால், மலேரியா, டெங்கு

(2) பிளேக், சீதபேதி, கொப்பளிப்பான்

(3) சின்னமுத்து, கழிச்சல், நீர்வெறுப்பு

24. உணவுப் பொருள்களை மூடிவைப்பதால்

(1) நுளம்புகளால் பரவும் நோயைத் தவிர்க்கலாம்

(2) இலையான்கள், கரப்பான்கள், எலிகள் என்பவற்றால் உணவு அசுத்தமடைவதைத் தவிர்க்கலாம்

(3) சூழலில் நுளம்புகள் பெருக்கமடைவதைத் தவிர்க்கலாம்

25. வானில் உயரத்தில் பறக்கின்ற கூர்மையான கண்களையுடைய ஊனுண்ணும் பறவை

(1) மழைக்குருவி (2) ஆந்தை (3) கழுகு

26. பின்வருவனவற்றில் தாராவின் அலகைக் காட்டுவது




(1)



(2)



(3)

27. 

காட்டப்பட்டுள்ள பாதம் எப்பறவைக்குரியது?

(1) சேவல்

(2) மரங்கொத்தி

(3) பருந்து

28. எட்டுக் கால்களை உடைய பிராணி

(1) இறால் (2) கரப்பான் (3) சிலந்தி

29. மண்ணை வளமாக்க உதவும் பிராணி

(1) மண்புழு (2) மட்டைத்தேள் (3) மரவட்டை

30. எலியின் உடலில் வாழும் தெள்ளு மூலமாகப் பரவக் கூடிய நோய்

(1) 'பிளேக்' என்னும் கொள்ளை நோய்

(2) கழிச்சல்

(3) டெங்கு

31. நுளம்புகளை அழிப்பதற்குப் பொருத்தமான ஒரு முறை **அல்லாதது**

(1) நீர் தேங்கி நிற்கும் இடங்களை அழித்தல்

(2) நீர் நிரம்பிய பாத்திரத்தில் மலர்களை இட்டு வைத்தல்

(3) சுற்றுப் புறத்தைச் சுத்தமாக வைத்திருத்தல்

32. பின்வரும் பிராணிகளில் பொருளாதார நன்மைகளைப் பெற வளர்க்கப்படுபவை எவை?

(1) கோழி, தேனீ (2) அணில், மைனா (3) நாய், அணில்

www.ikedu.lk

33. மனிதர்களால் சுற்றாடலில் வீசப்படும் பின்வரும் எப்பொருள் பிராணிகளுக்குத் தீங்காக அமைகிறது?
(1) வெட்டிய மரக்கறிகள்
(2) எஞ்சிய உணவுகள்
(3) எஞ்சிய உணவுகள் கொண்ட பொலிதீன்கள்

34. பகல் வேளைகளில் சூழலில் காணக் கூடிய பிராணிகள்
(1) ஆந்தை, நத்தை (2) புறா, காகம் (3) வெளவால், சாக்குருவி

35. இரவில் திரியும் பிராணி
(1) கிளி (2) கானான் கோழி (3) கோட்டான்

36. எதிரி வாலைப் பிடிக்க முயலும் போது வாலைப் பிய்த்துக் கொண்டு செல்வது
(1) ஓணான் (2) பல்லி (3) உடும்பு

37. மண்புழுவின் இருப்புக்குத் தீங்கு ஏற்படும் சந்தர்ப்பம் **அல்லாதது**
(1) வயலுக்கு நீர் பாய்ச்சுதல்
(2) நிலத்தில் வெந்நீரைக் கொட்டுதல்
(3) குப்பைகளை எரித்தல்

38. இலங்கைக்கே உரித்தான பிராணிகள் எனப்படுபவை
(1) இலங்கையில் அதிக அளவில் காணப்படும் பிராணிகளாகும்
(2) வேறு நாட்டிலிருந்து கொண்டு வந்து இலங்கையில் விருத்தியடையச் செய்த பிராணிகளாகும்.
(3) இலங்கையிலேயே தோற்றம் பெற்ற பிராணிகளாகும்

39. கால்கள் இல்லாததும் செட்டைகள் உடையதுமான ஒரு பிராணியையும் கால்கள் உள்ளதும் சிறகுகள் இல்லாததுமான ஒரு பிராணியையும் ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?
(1) மீன், கிளி (2) மண்புழு, நாய் (3) மீன், நாய்

40. கால்கள் இல்லாத பிராணிகள் **மாத்திரம்** அடங்கும் விடை எது?
(1) கரப்பான், மீன், சிலந்தி
(2) மட்டைத்தேள், பாம்பு, தாரா
(3) மண்புழு, பாம்பு, அட்டை

41. ஈசல்கள் பறத்தல் பின்வரும் எச்சூழல் மாற்றத்தை உணர்த்துவதாகும்?
(1) மழை பெய்தல் (2) பனி பொழிதல் (3) வறண்ட வானிலை ஏற்படல்

42. தமக்கிடையே ஒன்றிணைந்து கூட்டாகப் பணி செய்யும் பிராணிகளுக்கு உதாரணமாக இருப்பவை
(1) நுளம்பு, ஈ (2) எறும்பு, கறையான் (3) சிலந்தி, நுளம்பு

43. நாம் ஏன் விலங்குகளைத் **துன்புறுத்தலாகாது?**
(1) விலங்குகளில் இருந்து பயனைப் பெற முடியுமாதலால்
(2) விலங்குகள் அழகானவையாக இருக்கின்றமையால்
(3) எங்களைப் போன்றே பிராணிகளும் சுதந்திரமாக வாழ விரும்புகின்றமையால்

44. பின்வருவனவற்றுள் பூச்சி இனம் **அல்லாதது**
(1) தேள் (2) வண்ணத்துப் பூச்சி (3) வீட்டு ஈ

45. தாம் செல்லும் திசையை மாற்றிக் கொள்ள மீன்கள் பயன்படுத்தும் உறுப்பு
(1) மார்புச் செட்டை (2) குதச் செட்டை (3) வாற்செட்டை

www.ikeau.lk

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2022

## சுற்றாடல் சார் செயற்பாடுகள் 5

5

45 புள்ளிகள்

சுட்டெண்:.....

1 மணித்தியாலம்

● சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

1. பின்வரும் எப்பிராணிகளின் வாழ்விடம் மரப்பொந்துகளில் காணப்படும்?
   (1) செவ்வெறும்பு, தேன்சிட்டு (2) கிளி, மைனா (3) காகம், கொக்கு

2. வண்ணத்துப் பூச்சியின் முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்களின் உணவாக **அமையாதது**
   (1) தாவர இலைகள்
   (2) தாவரத்தின் காய்கள்
   (3) வண்ணத்துப் பூச்சியின் எஞ்சிய முட்டைகள்

3. வண்ணத்துப் பூச்சியின் முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்களின் நிறம்
   (1) பச்சை அல்லது பழுப்புநிறம் (2) மண்ணிறம் (3) கறுப்பு நிறம்

4. வண்ணத்துப் பூச்சிகள் முட்டையிடுவது தாவரத்தின்
   (1) தண்டுகளில் (2) இலையின் கீழ்ப்புறத்தில் (3) இலையின் மேற்புறத்தில்

5. பிராணிகளின் இருப்புக்குத் தீங்கு பயக்கும் மனிதச் செயற்பாடு
   (1) பயிர்களுக்கு இரசாயனப் பசளையிடுதல்
   (2) வெள்ளப் பெருக்கினால் பிராணிகளின் வாழிடங்கள் அடித்துச் செல்லப்படல்
   (3) பெருங்காற்றினால் மரக்கிளைகள் முறிந்து வீழ்தல்

6. வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை வட்டத்தின் இரண்டாம் மூன்றாம் பருவங்கள் இரண்டும் எவை?
   (1) முட்டைப் பருவம், குடம்பிப் பருவம்
   (2) குடம்பிப் பருவம், கூட்டுப் புழுப்பருவம்
   (3) முட்டைப் பருவம், நிறையுடலி

7. வண்ணத்துப் பூச்சியினது பிறப்பின் சந்தர்ப்பங்களை அவதானித்து அச்சந்தர்ப்பங்கள் ஒழுங்கு முறைப்படி எழுதப்பட்டன. அவற்றில் முதல் மூன்று சந்தர்ப்பங்களையும் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க
   (1) முட்டையிலிருந்து புழு வெளிவந்தது, புழு கூட்டை அமைத்தது, சவ்வு கழன்றது
   (2) கூடு வெடித்தது, புழு கூட்டை அமைத்தது, முட்டையிலிருந்து புழு வெளிவந்தது
   (3) முட்டையிலிருந்து புழு வெளிவந்தது, புழு இலை உண்ணத் தொடங்கியது, சவ்வு கழன்றது

8. பாலூட்டுவதன் மூலம் குட்டிகளை வளர்க்கும் இயல்பு உடைய பிராணிகள் அழைக்கப்படுவது
   (1) மூலையூட்டிகள் என (2) தாவர உண்ணிகள் என (3) நகருயிர்கள் என

9. அனைத்துமுண்ணி விலங்குகள் எனக் குறிப்பிடப்படுபவை
   (1) தாவர வகையை மாத்திரம் உணவாகக் கொள்ளும் விலங்குகள்
   (2) மாமிச வகையை மாத்திரம் உணவாகக் கொள்ளும் விலங்குகள்
   (3) தாவர உணவு, மாமிச உணவு ஆகிய இரண்டையும் உணவாகக் கொள்ளும் விலங்குகள்

10. மூலையூட்டி வகைப் பிராணிகள் மாத்திரம் அடங்கியுள்ள தொகுதி எது?
    (1) பல்லி, முதலை, முயல் (2) உடும்பு, மயில், யானை (3) கீரி, மான், எலி

www.ikeduk.lk

11. உண்ணும் உணவுக்கு அமைய, தும்பி, நரி, புலி ஆகியன பின்வருவனவற்றில் எவ்வகைக்குள் அடங்கும்?
(1) இலையுண்ணிகள் (2) ஊன் உண்ணிகள் (3) அனைத்துமுண்ணிகள்

12. இலையுண்ணி (தாவர உண்ணி) ஒன்றையும் ஊன் உண்ணி (மாமிச உண்ணி) ஒன்றையும் முறைப்படி காட்டும் விடை எது?
(1) முயல், ஆடு (2) நரி, காகம் (3) மாடு, சிங்கம்

13. மீசையின் மூலம் உணவைக் கண்டறியும் விலங்கு
(1) மீன் (2) பல்லி (3) பூனை

14. நீரிலும், நிலத்திலும் வாழும் விலங்கினங்கள் (ஈருடக வாழிகள்) **மாத்திரம்** அடங்கும் விடை
(1) இறால், மீன் (2) தவளை, முதலை (3) மீன், தவளை

15. நீரில் **மாத்திரம்** வாழும் விலங்கு
(1) தேரை (2) ஆமை (3) இறால்

16. அனைத்தும் உண்ணிகள் **மாத்திரம்** அடங்கும் விடை
(1) கோழி, நாய், பூனை (2) பருந்து, செண்பகம், கரடி (3) கிளி, மைனா, முயல்

17. தான் சஞ்சரிக்கும் மேற்பரப்புகளில் ஒட்டிக் கொள்ளக் கூடிய விஷேட பாதங்களைக் கொண்டுள்ள பிராணி எது?
(1) எலி (2) பூனை (3) பல்லி

18. தாவரங்கள், பிராணிகள் என்பவற்றுக்கு நன்மையைத் தரும் மனிதனின் செயற்பாடு
(1) காடுகளுக்குத் தீ மூட்டுதல்
(2) பழமரங்களை நட்டு வளர்த்தல்
(3) காடுகளில் அத்து மீறிய கட்டட நிருமாண வேலைகள் செய்தல்

19. இலங்கைக்கே உரித்தான நகருயிர் **அல்லாதது**
(1) நீர்ப்பாம்பு (2) உடும்பு (3) கொம்பு ஓணான்

20. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்குகள் **மாத்திரம்** அடங்கும் விடை எது?
(1) சுண்டெலி, மரநாய் (2) கொம்பு ஓணான், கருங்குரங்கு
(3) உடும்பு, முதலை

21. மள்புளுட்டா, சபன் கோழி ஆகியன முறையே இலங்கைக்கே உரித்தான
(1) நகருயிரும் பறவையும் ஆகும் (2) மீனும் முலையூட்டியும் ஆகும்
(3) மீனும் பறவையும் ஆகும்

22. வீட்டில் நாம் தனிப்பட்ட வகையில் பயன்படுத்தும் பொருள்கள் **மாத்திரம்** இடம்பெறும் விடை எது?
(1) தலையணை, பற்றூரிகை, துவாய் (2) குடை, தொலைக்காட்சி, சீப்பு
(3) தேநீர்க்கோப்பை, கத்தரிக்கோல், கதிரை

23. வீட்டு வரவேற்பறையில் பயன்படுத்தப்படும் பொருள்கள் இரண்டு
(1) கதிரை, மின்விசிறி (2) அலுமாரி, கட்டில் (3) கட்டில், கதிரை

24. வீட்டில் படுக்கையறையில் **பயன்படுத்தப்படாத** உபகரணம்
(1) உரல் (2) கட்டில் (3) மின்விசிறி

25. வீட்டில் உள்ள சகலரும் பொதுவாகப் பயன்படுத்தும் பாவனைப் பொருள்
(1) முகம் பார்க்கும் கண்ணாடி (2) கைக்குட்டை (3) தலையணை

www.ikeou.lk

26. நாம் பயன்படுத்தும் பண்டங்கள் பொருள்களை வீட்டில் ஒழுங்காக அடுக்கி வைப்பதனால்
(1) அவற்றை மீள எடுப்பதற்கு நேர விரயம் ஏற்படும்
(2) வீடு நேர்த்தி இன்றிக் காணப்படும்
(3) தேவையின் போது அவற்றை இலகுவாக எடுக்கலாம்

27. உபகரணம் ஒன்றைப் பயன்படுத்திய பின்னர் நாம் செய்யக் கூடிய நற்பழக்கங்களில் **அடங்காதது**
(1) பயன்படுத்திய பின் உபகரணத்தைச் சுத்திகரித்தல்
(2) உபகரணத்தை உரிய இடத்தில் நேர்த்தியாக அடுக்கி வைத்தல்
(3) பயன்படுத்திய இடத்திலேயே உபகரணத்தை வைத்துவிடல்

28. தேவநம்பிய தீச மன்னனால் கட்டுவிக்கப்பட்டது
(1) மகாகணதராவாவி (2) யோதவாவி (3) திசாவாவி

29. பேற்றுக்கம்பம், முள்ளு, சுருதிப் பெட்டி ஆகிய உபகரணங்கள் பாடசாலையில் இருக்கத்தக்க இடங்களை முறையே காட்டும் விடை எது?
(1) பாடசாலை அலுவலகம், வகுப்பறை, விவசாய அலகு
(2) விளையாட்டு மைதானம், விவசாய அலகு, சங்கீத அறை
(3) சங்கீத அறை, விவசாய அலகு, விளையாட்டு மைதானம்

30. பாடசாலையில் உள்ள உபகரணங்கள், பண்டங்கள் தொடர்பான பதிவுகள் அடங்கிய ஏடு எது?
(1) பொருட்பதிவேடு
(2) தினக்குறிப்பேடு
(3) தரவிருத்தி உள்ளீட்டுக் கணக்கேடு

31. அனல்மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவது
(1) சூரிய ஒளி (2) நீர் (3) நிலக்கரி

32. காற்று பயன்படுத்தப்படும் சந்தர்ப்பமாக **அமையாதது**
(1) ஈரத்துணிகளை உலர்த்துதல்
(2) நெல் தூற்றுதல்
(3) போரணைகளில் பாணை வெதுப்புதல்

33. 'டெபிற் அட்டை' எனப்படுவது
(1) நேரடியாகப் பணத்தைப் பயன்படுத்தாமல் கடைகளில் கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பயன்படுத்தும் அட்டை
(2) கைத்தொலைபேசிப் பயன்பாட்டாளர்களுக்கு வழங்கப்படும் தரப்படுத்தல் அட்டை
(3) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் அட்டை

34. பொருட்கள் பற்றிய விளம்பரங்களின் முக்கிய நோக்கமாக அமைவது
(1) அந்தப் பொருளை வாங்குவதற்கு மக்களை அதிக அளவில் ஈடுபடுத்தல்
(2) அந்தப் பொருளின் நன்மை, தீமை பற்றி மனிதர்களுக்கு அறிவூட்டுதல்
(3) அந்தப் பொருள்களின் உற்பத்தியில் மற்றவர்களையும் ஊக்கப்படுத்துதல்

35. இலங்கையரான எமக்கு இலவசமாகக் கிடைக்கும் சேவை **அல்லாதது**
(1) மின்சாரம் (2) சுகாதாரம் (3) கல்வி

36. இலங்கையில் அனைத்து அரச பாடசாலை மாணவர்களுக்கும் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படுவன
(1) பகலுணவு, சீருடை (2) பாடநூல்கள், பகலுணவு (3) சீருடை, பாடநூல்கள்

www.ikedu.lk

37. போலியான தரக் குறைவான பண்டங்களை விற்பனை செய்யும் ஒருவருக்கு எதிராக முறைப்பாடு செய்வதற்கு மிகப் பொருத்தமான இடம்

(1) பிரதேச சபை

(2) கிராம சேவகர் காரியாலயம்


(3) நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை

38. பிரதேச செயலகத்தில் சேவை வழங்கும் அதிகாரியாகப் பணியாற்றுபவர்

(1) பாடசாலை அதிபர்

(2) பிரதேச சபைத் தவிசாளர்

(3) பிரதேச செயலாளர்

39. 

இவ்வுபகரணம் பயன்படுத்தப்படுவது

(1) தாள்களைப் பிணைக்க

(2) தாள்களைக் கூறாக்க

(3) தாள்களில் துளையிட

40. கடதாசித் துண்டுகளைக் கிழித்து ஒட்டிச் செய்யப்படும் ஆக்கம்

(1) அச்சுப்பதித்தல் (2) ஒரிகாமி (3) கொலாஜ்

41. பயன்படுத்திய பின் விளக்குமாறை (ஈர்க்குக்கட்டை) வைக்க வேண்டிய சரியான முறை எது?



(1)



(2)



(3)

42. பாடசாலைக்குக் கொண்டு செல்லும் நீர்ப்போத்தலைப் புத்தகப் பையினுள் வைக்க வேண்டிய சரியான முறை எது?



(1)



(2)




(3)


43. நெல்லைத் தூற்றுவதற்கும் அரிசியைப் புடைப்பதற்கும் பயன்படுத்தப்படும் உபகரணம்

(1) ஓலைப்பெட்டி (2) அரிதட்டு (3) சுளகு


44. பின்வரும் தையல் முறைகளில் கம்பளித் தையலைக் காட்டுவது எது?



(1)



(2)



(3)

45. நாளாந்தம் பயன்படுத்தத் தேவையான உலோக உபகரணங்களைத் தயாரிக்கும் கைத்தொழில் எது?

(1) கொல்லன் வேலை (2) மரவேலை (3) மேசன் வேலை

www.lkedu.lk

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2022

## சுற்றாடல் சார் செயற்பாடுகள் 6

5

45 புள்ளிகள்

சுட்டெண்:..... 1 மணித்தியாலம்

● சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக


1. துறப்பணம், மணியாசு ஆகிய உபகரணங்கள் பயன்படுத்தப்படும் கைத்தொழில்கள் முறையே எவை?
   (1) மேசன் வேலை, கொல்லன் வேலை
   (2) கொல்லன் வேலை, விவசாயம்
   (3) மரவேலை, மேசன் வேலை

2. மீனவர் சிறுமீன்களைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்த உபகரணத்துக்கு வழங்கப்படும் பெயர் யாது?
   (1) கரைவலை (2) அத்தாங்கு (3) மடி


3. பின்வரும் கருவிகளிடையே ஆணியை இறுக்கவும் கழற்றவும் பயன்படுத்தத் தக்க மிகப் பொருத்தமான உபகரணம்



(1)



(2)



(3)

4. கைமரத்தினூடாகச் செல்லும் துளையைத் துளைத்தல், மரக்குற்றியில் உருவத்தைச் செதுக்குதல் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் முறையே எவை?
   (1) துறப்பணம், உளி (2) உளி, வாள் (3) வாள், துறப்பணம்

5. சுவரை நிலைக்குத்தாகக் கட்டி எழுப்புதல், ஒரு தளத்தின் கிடை இயல்பை இனங்காணுதல் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள்
   (1) நீர் மட்டம், துறப்பணம் (2) தூக்குக்குண்டு, உளி (3) தூக்குக்குண்டு, நீர்மட்டம்

6. பாரமான ஒரு பொருளை ஓர் இடத்திலிருந்து மற்றுமோர் இடத்துக்குக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தக் கூடிய உபகரணங்கள் **மாத்திரம்** இடம்பெறும் விடை
   (1) பாரம்தூக்கி, கப்பி, சில்லு வண்டி
   (2) கப்பி, குறடு, சீவுளி
   (3) உளி, குறடு, சில்லுவண்டி

7. உலைத்துருத்தியைப் பயன்படுத்துபவர்
   (1) தச்சன் (2) மேசன்மார் (3) கொல்லர்

8. பாதணிகளைக் கழற்றிய பின்னர் வீட்டினுள் நுழைதல் நல்ல சுகாதாரப் பழக்கமாயிருப்பதற்குக் காரணம்
   (1) அடுத்த நாள் பாதணிகளைக் கண்டுபிடிக்க இலகுவாக இருக்கின்றமை
   (2) பாதணிகளில் உள்ள கிருமிகள் வீட்டினுள்ளே நுழைவது தவிர்க்கப்படுகின்றமை
   (3) பாதணிகளைக் கழற்றுவதனால் பாதங்களுக்கு சௌகரியம் இருப்பதை உணர்கின்றமை

9. பாக்குவெட்டி பயன்படுத்தப்படுவது
   (1) ஆணி கழற்றுவதற்கு
   (2) போத்தல் மூடி திறப்பதற்கு
   (3) பொருள்களைத் துண்டாக்குவதற்கு

www.ikeu.lk

10. தச்சு வேலைத்தலத்தில் பயன்படுத்தப்படும் பொருள் **அல்லாதது**

(1) அரம் (2) தூக்குக்குண்டு (3) சீவுளி

11. சரியான கொண்ணிலையில் நடக்கும் ஒருவர் அடியெடுத்து வைக்கும் போது நிலத்தில் படவேண்டிய பாதத்தின் பகுதிகளை ஒழுங்கு முறையில் காட்டும் விடை

(1) குதிகால், விரல் நுனிகள். உள்ளங்கால்

(2) குதிகால், உள்ளங்கால், விரல் நுனிகள்

(3) விரல் நுனிகள், உள்ளங்கால், குதிகால்

12. பரம்புப்பலகை பயன்படுத்தப்படும் கைத்தொழில்

(1) மீன்பிடி (2) சுரங்கம் (3) விவசாயம்

13. வனைதற் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் உபகரணம்

(1) நுகத்தடி (2) செக்கு (3) வனைதற்சக்கரம்

14. பின்வரும் உபகரணங்களில் சுரையை இறுக்கப் பயன்படுத்தப்படுவது



(1)



(2)



(3)

15. ஆணியைக் கழற்றுவதற்குச் சுத்தியலைச் சரியாகப் பிடிக்க வேண்டிய முறையைக் காட்டும் படம் எது?



(1)



(2)




(3)

16. செக்கு பயன்படுத்தப்படுவது

(1) கருங்கல் உடைக்க (2) பாரம் இழுக்க (3) எண்ணெய் பிழிய

17. 'பட்டடை' பயன்படுத்தப்படும் கைத்தொழில்

(1) கொல்லன் வேலை (2) மரவேலை (3) விவசாயம்

18. 

படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம் பின்வரும் எதனைச் செய்வதற்கு மிகப் பொருத்தமானது?

(1) திருகு ஆணி கழற்றுவதற்கு

(2) தகட்டைத் துளைப்பதற்கு

(3) இரும்பு ஆணி அறைவதற்கு

19. ஆழமான கிணற்றிலிருந்து நீரை மேலே எடுப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற வேலையை இலகுவாக்கும் பொறி எது?

(1) கப்பி (2) நீர்ச்சில்லு (3) திருகுபிடி


20. மெல்லிய கம்பிகளைத் துண்டுகளாக வெட்டுவதற்கு மிகப் பொருத்தமான உபகரணம்



(1)



(2)



(3)

21. வாளைத் தீட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்

(1) உளி (2) சீவுளி (3) அரம்

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

# பாலர் வகுப்பு முதல் A/L வரை

## தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு உங்கள் ஆசான் "





தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

Contact

76667-4945


22. தாம் பயன்படுத்தும் உபகரணங்களைச் சரியாகக் கையாள்வதும் அவற்றை உரிய காலத்தில் பராமரித்தலும் நல்ல பழக்கம் எனக் கூறப்படுவதற்கான காரணம்
(1) நேர விரயத்தையும் விபத்துக்களையும் குறைக்க முடிகின்றமை
(2) ஓர் உபகரணத்தைக் கொண்டு பல வேலைகளைச் செய்ய முடிகின்றமை
(3) உபகரணங்களைப் பயன்படுத்துபவருக்கு நற்பெயர் கிடைக்கின்றமை

23. பின்வரும் உணவுப் பொருள்களுள் உற்பத்தித் திகதிக்கும் காலாவதியாகும் திகதிக்கும் இடையே குறைந்த காலத்தைக் கொண்டது எது?
(1) தயிர் (2) ரின்பால் (3) ரின் மீன்

24. சோறு சமைப்பதற்காக அரிசியைக் களைவதற்கு மிகப் பொருத்தமான பாத்திரம்
(1) மட்கோப்பை (2) அரிக்குஞ்சட்டி (3) மட்பானை

25. வயல் வேலைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள் மாத்திரம அடங்கும் விடை எது?
(1) மண்வெட்டி, வனைசில்லு, செக்கு
(2) அரிவாள், நுகத்தடி, கலப்பை
(3) அரிவாள், செக்கு, கைவலை

26. "பச்ச வளையல் தொட்டு ஏலேலோ மயில் ஏலேலோ
பயிரறுக்கப் போற பெண்ணே ஏலேலோ மயில் ஏலேலோ" என்ற பாடல்
(1) மீனவர் பாடல் (2) வண்டிப் பாடல் (3) அரிவி வெட்டுப் பாடல்

27. 
இந்த உபகரணத்தின் பயன்பாடு
(1) பலகையை அழுத்தமாக்கல்
(2) பலகையில் துளையிடல்
(3) பலகையில் நேர்கோடொன்றை வரைதல்

28. கடையில் பொதி செய்யப்பட்ட பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்யும் போது கவனம் செலுத்த வேண்டிய மிக முக்கிய அம்சங்களாவன
(1) உற்பத்தித் திகதி, வாங்கப்படும் கடை, விலை
(2) பொருளின் தரம், செலுத்தும் பணத்துக்கான பெறுமதி, காலாவதித் திகதி
(3) பொதியுறை, விலை, வாங்கப்படும் கடை

29. 
தலையணை உறைக்கு உருவில் காட்டப்பட்டவாறான பூவைத் தைக்கும் போது பூ இதழ்களைச் சுற்றித் தைக்க வேண்டிய தையல் எது?
(1) நரம்புத் தையல்
(2) சங்கிலித் தையல்
(3) கம்பளித் தையல்

30. பருகுவதற்காகப் பால் பைக்கற்றைத் திறப்பதற்கு முன்பாகப் பைக்கற்றில் குறிக்கப்பட்டுள்ள விடயங்களில் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது
(1) உற்பத்தி செய்த தினம் (2) காலாவதித் தினம் (3) பாலில் அடங்கியுள்ளவை

31. நுகர்வுக்கான வர்த்தகப் பொருளின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலச்சினை எது?
(1) SLS (2) SOS (3) ISO

32. கைக்குட்டையில் பூவைத் தைக்கும் போது பூவின் காம்பைத் தைப்பதற்கு மிக உகந்த தையல் முறை யாது?
(1) நரம்புத் தையல் (2) விஸ்பம் தையல் (3) கம்பளித் தையல்

www.ikedu.lk

33. பருத்திப் புடைவைத் துண்டைக் கொண்டு கைக்குட்டையைத் தயார் செய்யும் போது புடைவைத் துண்டைச் சுற்றிவர மடித்துத் தைக்க வேண்டிய தையல் எது?
(1) கம்பளித் தையல் (2) சங்கிலித் தையல் (3) நரம்புத் தையல்

34. வேளை உணவொன்றை உட்கொள்வது தொடர்பான கூற்றுக்களில் **பிழையானது**
(1) உண்ணப்படும் உணவு கலப்பு உணவாக அமைதல்
(2) ஓய்வு கிடைக்கும் நேரத்தில் உணவை உட்கொள்ளல்
(3) உரிய நேரத்தில் உணவை உட்கொள்ளல்

35. உணவு உட்கொள்ளல் தொடர்பாக எம்மிடம் இருக்க வேண்டிய சிறந்த பழக்கம்
(1) பிரதான உணவு வேளைகளில் கீரை வகை ஒன்றைச் சேர்த்துக் கொள்ளல்
(2) இனிப்புச் சுவையுடைய உணவுகளை அதிகம் உண்ணல்
(3) உடனடி உணவுகளை அடிக்கடி பயன்படுத்தல்

36. கமலாவின் மதிய நேர உணவுக்காக வைக்கப்பட்டிருந்த சோறு, உருளைக்கிழங்கு, வெண்டிக்காய், பொன்னாங்கண்ணி வறை என்பன இரண்டு உணவுத் தொகுதிகளுக்கு உரியனவாகும். இவற்றுக்கு மேலதிகமாக இந்த உணவு வேளைக்கு உள்ளடக்க வேண்டிய மற்றைய உணவுத் தொகுதி எது?
(1) பாதுகாப்புக்கானது (2) சக்திக்கானது (3) வளர்ச்சிக்கானது

37. உடலை வளர்க்கும் ஓர் உணவையும் உடலுக்குச் சக்தியைத் தரும் ஓர் உணவையும் முறையே காட்டும் விடை எது?
(1) பயறு, பலாக்காய் (2) பலாக்காய், அன்னாசி (3) பாண், சீனி

38. உடலுக்குத் தேவைப்படும் புரதத்தைப் பெறுவதற்கு உகந்த உணவு **அல்லாதது**
(1) பருப்பு (2) வற்றாளை (3) இறைச்சி

39. உடலை நோயிலிருந்து பாதுகாக்கும் உணவுச் சோடி
(1) முருங்கைக் கீரை, வெண்டி (2) இடியப்பம், பருப்பு (3) சோறு, உருளைக்கிழங்கு

40. எலுமிச்சம் பழச்சாற்றில் அதிகம் இருக்கும் போசணைப் பொருள்
(1) கொழுப்பு (2) கல்சியம் (3) விற்றமின் C

41. நாம் உண்ணும் காய்கறிகள் கீரை வகைகளின் போசணைப் பெறுமானம் குறையாதிருப்பதற்கு அவற்றை,
(1) அதிக நேரம் அவித்த பின் உண்ண வேண்டும்
(2) நறுக்கிய பின்னர் நன்றாகக் கழுவி, சமைத்து உண்ண வேண்டும்
(3) அரை அவியலாகச் சமைத்து அல்லது பச்சையாக உண்ண வேண்டும்

42. மென்பானப் போத்தல்களில் அவற்றில் அடங்கியுள்ள சீனி மட்டத்தைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் நிறக் குறியீட்டுத் தொகுதியில் அடங்கும் மூன்று நிறங்களும் எவை?
(1) சிவப்பு, நீலம், பச்சை (2) சிவப்பு, மஞ்சள், பச்சை (3) நீலம், பச்சை, செம்மஞ்சள்

43. செயற்கை நிறப்பொருள்கள், சுவையூட்டிகள் ஆகியன சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்வதால் ஏற்படக்கூடிய நோய்
(1) நெருப்புக் காய்ச்சல் (2) புற்றுநோய் (3) நீர்வெறுப்பு

44. பானப் போத்தலின் மேலுறையில் பச்சை நிற வட்ட வடிவக் குறியீடு உள்ள பானத்தைத் தெரிவு செய்தல் உடலாரோக்கியத்துக்கு நல்லது எனக் கூறப்படுவதற்கான காரணம், பானத்தில் அடங்கியுள்ள சீனியின் மட்டம்
(1) குறைவாக உள்ளமை (2) அதிகம் உள்ளமை (3) மத்திமமாக உள்ளமை

45. நிலக்கடலை, மாஜரீன் ஆகியவற்றில் அதிகம் அடங்கியுள்ள போசணைப் பொருள்
(1) கொழுப்பு (2) புரதம் (3) காபோவைதரேற்று

www.kcdu.lk

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2022

## சுற்றாடல் சார் செயற்பாடுகள் 7

5

45 புள்ளிகள்


சுட்டெண்:..... 1 மணித்தியாலம்

● சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

1. உணவு உண்ணும் போது கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களில் ஒன்று எது?
   (1) உதடுகளை அதிகமாகத் திறந்தவாறு உணவை உட்கொள்ளல்
   (2) உணவை விழுங்குவதற்கு முன்னர் போதிய அளவு அதனை மெல்லுதல்
   (3) மற்றையவர்களின் உணவுப் பாத்திரங்களை எட்டிப் பார்த்தல்

2. உணவு உண்டதன் பின்னர் கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கமாக **அமையாதது**
   (1) கைகளையும் வாயையும் சுத்தம் செய்தல்
   (2) தட்டில் எஞ்சியுள்ள உணவின் பகுதிகளைக் குப்பை இடும் பாத்திரத்தில் இடுதல்
   (3) வெற்று உணவுத் தட்டை, உணவை உண்ட இடத்தில் வைத்துவிடல்

3. தானியப் பயிர் வகைக்குரிய பருப்புக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய உணவு
   (1) பயறு (2) பூசணிக்காய் (3) வற்றாளை

4. 
   வகுப்பறையில் மாணவர்களால் செய்யப்பட்ட ஈரப்பலாக்காய் ஒன்றின் மாதிரியைக் காட்டும் படம் அருகே தரப்பட்டுள்ளது. இதனைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களைக் காட்டும் விடை எது?
   (1) குன்றிமணிகள், புளியம் வித்துக்கள், பலூன்
   (2) பருப்பு, போத்தல் மூடிகள், பசை
   (3) பலூன், பசை, பாசிப்பயறு

5. பின்வருவனவற்றுள் இலைக்கஞ்சியைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுபவை எவை?
   (1) நெல்லி, அகத்தி (2) சாத்தாவாரி, பொன்னாங்கண்ணி
   (3) பொன்னாவரை, அம்பரல்லா

6. அவிப்பதன் மூலம் ஓர் ஒளடதப் பானம் தயாரிக்கப் பயன்படுவது
   (1) வெரலிக்காய் (2) நன்னாரி வேர் (3) கெக்கரிக்காய்

7. ஏதேனும் பாத்திரமொன்றில் உணவு அல்லது பானத்தை இடுவதற்கு முன், அப்பாத்திரத்தை நன்றாக
   (1) கழுவுதல் வேண்டும்
   (2) துடைக்க வேண்டும்
   (3) கழுவி ஈரலிப்பு நீங்கக் கூடியவாறு நன்கு துடைக்க வேண்டும்

8. கைப்பிடி கொண்ட கோப்பைகளில் சூடான பான வகைகளைப் பரிமாறும் போது கோப்பையின் கைப்பிடி அமைந்திருக்க வேண்டியது பெறுபவரின்
   (1) வலப் பக்கமாக (2) இடப் பக்கமாக (3) எதிர்ப் பக்கமாக

9. மணலினுள் புதைத்து வைப்பதன் மூலம் நெடுங்காலத்துக்குப் பேணத்தக்க உணவு வகைகள்
   (1) மாம்பழம், வெங்காயம் (2) எலுமிச்சம் பழம், பலாக்கொட்டை
   (3) உருளைக்கிழங்கு, ஈரப்பலா

10. அசுத்தமான உணவுகளை உண்பதால் ஏற்படக்கூடிய நோய்
    (1) நீரிழிவு (2) நீர்வெறுப்பு (3) வயிற்றோட்டம்

www.ikeu.lk

11. ரின் மீனைக் கொள்வனவு செய்யும் போது குறைந்த அளவு கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயம்
(1) காலாவதியாகும் திகதி (2) கொள்வனவு செய்யப்படும் கடை
(3) பொருளின் வர்த்தகப் பெயர்

12. இறைச்சியை நீண்ட காலம் வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பண்டைய முறை
(1) உப்புக் கரைசலில் அமிழ்த்தி வைத்தல் (2) தேனில் அமிழ்த்தி வைத்தல்
(3) அவித்தல்

13. உலர்த்துவதாலும், மணலில் புதைத்து வைப்பதாலும் உப்பு இடுவதாலும் நீண்ட காலம் வைத்திருக்கக் கூடிய உணவு
(1) புளியம் பழம் (2) பிலிங் பழம் (3) எலுமிச்சம் பழம்

14. புகையூட்டுவதன் மூலம் நீண்ட காலம் பேணப்படும் ஓர் உணவு
(1) கருவாடு (2) ஈரப்பலாக்காய் (3) மாங்காய்

15. மீனை நீண்ட காலம் வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்படும் முறைகளில் ஒன்று எது?
(1) தகரத்தில் அடைத்தல் (2) மணலினுள் புதைத்தல் (3) பாணி இடல்

16. நாம் உண்ணும் உணவு பயன்பாட்டிற்குப் பொருத்தமற்றதாக மாறுவதற்கு ஏதுவாக அமையும் இயற்கைக் காரணங்களில் ஒன்று எது?
(1) காய்களைப் பழுக்க வைப்பதற்கு இரசாயனங்களை இடுதல்
(2) கவனமின்றி உணவுகளைப் பொதி செய்தல்
(3) சீஸ், மாஜரின் போன்ற உணவுகளில் அதிக சூரிய ஒளி படுதல்

17. மீனில் அதிகம் அடங்கியுள்ள போசணையைப் பெறுவதற்கு மீனுக்குப் பதிலாக உண்ணக்கூடிய உணவு எது?
(1) மரவள்ளிக் கிழங்கு (2) பருப்பு (3) பூசணிக்காய்

18. உவர் சூழலில் வளரும் தாவரங்களில் அதிகம் அடங்கியுள்ள போசணைக் கூறு எது?
(1) அயடீன் (2) கல்சியம் (3) இரும்பு

19. மாப்பொருள் கொண்ட கிழங்கு வகைகளில் அதிகம் அடங்கியுள்ள போசணை
(1) புரதம் (2) கொழுப்பு (3) காபோவைதரேற்று

20. விற்றமின்கள், கனியுப்புக்கள் அடங்கிய உணவுகள்
(1) உடலுக்குச் சக்தி தரும் உணவுகளாகும்
(2) உடலுக்குப் பாதுகாப்புத் தரும் உணவுகளாகும்
(3) உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவுகளாகும்

21. பின்வரும் எவ்விற்றமின் குறைபாடு காரணமாக பசியின்மை, வயிற்றில் எரிச்சல் என்பன ஏற்படுகின்றன?
(1) விற்றமின் B (2) விற்றமின் C (3) விற்றமின் D

22. விற்றமின் A குறைபாட்டினால் ஏற்படக்கூடியது
(1) எலும்பு நோய்கள் (2) பற்கள் சிதைவுறுதல் (3) கண்பார்வை குறைவடைதல்

23. உடல் பொலிவிழந்து போவதற்கு பின்வரும் எப்போசணை வகையின் குறைபாடு காரணமாகும்?
(1) புரதம் (2) காபோவைதரேற்று (3) கொழுப்பு

24. பின்வருவனவற்றுள் தொற்றாத நோய்கள்
(1) உயர்குருதி அழுக்கம், இரைப்பையழற்சி (2) வாந்திபேதி, மலேரியா
(3) சின்னமுத்து, சீதபேதி

25. அலுமினியப் பாத்திரத்தில் உணவைத் தயாரிக்கும் போது சேர்க்கக் கூடாதது
(1) இஞ்சி (2) எலுமிச்சம் புளி (3) கறிவேப்பிலை

www.ikeduk

26. சமைப்பதற்குக் கொண்டு வரப்பட்ட கீரை வகைகளை வெட்டிக் கழுவாது கழுவிய பின்னரே வெட்டுதல் வேண்டும். இவ்வாறு செய்வதற்கான காரணம்,
(1) கீரையின் சுவை மேலும் அதிகரிக்கின்றமை
(2) போசணைக் கூறுகளில் இழப்பு ஏற்படாமல் இருக்கின்றமை
(3) விரைவாக சமைக்க முடிகின்றமை

27. பாவிக்கப்பட்ட சமையல் பாத்திரங்களை நன்றாகக் கழுவிய பின்னர் அவற்றை உலர விடவும் வேண்டும். அவ்வாறு உலரவிடுவதற்குப் பிரதான காரணமாக அமைவது எது?
(1) பாத்திரங்களை நீண்ட காலம் பயன்படுத்த முடிகின்றமை
(2) உலரவிடுவதால் பாத்திரங்கள் அழகு பெறுகின்றமை
(3) ஈரலிப்பு உள்ள பாத்திரங்களில் கிருமிகள் வளர அதிக வாய்ப்பு இருக்கின்றமை

28. உணவு தொடர்பான விளம்பரங்களின் நன்மையாக இருக்கக் கூடியது
(1) உணவில் அடங்கியுள்ள போசணைத் தன்மை குறித்து அறிவூட்டம் கிடைத்தல்
(2) உணவு தொடர்பான முற்றிலும் சரியான விளக்கங்கள் மாத்திரம் கிடைக்கப் பெறுதல்
(3) உணவினால் ஏற்படக்கூடிய நன்மையையும் தீமையையும் ஒரே தடவையில் அறிய முடிதல்

29. மயக்கமடைந்த ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டியது
(1) நீர் புகட்டுதல்
(2) நோயாளிகளைச் சூழக் காற்றோட்டம் இருக்க வகை செய்தல்
(3) நோயாளியைச் சுற்றிக் கூடியிருத்தல்

30. உங்களது நண்பர்களில் ஒருவர் நீரில் மூழ்கிவிட்டால் அவரைக் காப்பாற்றுவதற்காக அச்சந்தர்ப்பத்தில் நீங்கள் செய்யக் **கூடாதது.**
(1) உதவி கோரிச் சத்தமிடுதல்
(2) விரைவில் வளர்ந்தோர் ஒருவருக்கு அறிவித்தல்
(3) அவரைக் காப்பாற்றுவதற்காக, நீங்கள் நீரில் குதித்தல்

31. பின்வருவனவற்றுள் எது ஒரு **பாதுகாப்பற்ற** சந்தர்ப்பம் ஆகும்?
(1) பயணத்தின் போது தொலைபேசியைப் பயன்படுத்திக் கொண்டு வாகனத்தை ஓட்டிச் செல்லுதல்
(2) மின்னல் ஏற்படும் போது வீட்டில் பலகைக் கட்டிலின் மீது இருத்தல்
(3) உலர்ந்த இறப்பர் கால்மிதியின் மீது நின்று கொண்டு மின் அழுத்தியினால் துணிகளை அழுத்துதல்

32. பின்வருவனவற்றுள் எது, ஒரு பாதுகாப்பான செயற்பாடாகும்?
(1) மின்னல் மின்னும் வேளைகளில் திறந்த வெளிகளில் நிற்றல்
(2) ஈரமான கைகளுடன் மின்சாரத்துடன் தொடுக்கப்பட்ட உபகரணங்களைத் தொடுதல்
(3) இடிமின்னல் வேளைகளில் கைத்தொலைபேசிப் பாவனையை நிறுத்தி வைத்தல்

33. நாய் கடித்தால் முதலில் செய்ய வேண்டியது
(1) கடித்த இடத்தில் துணியினால் கட்டுதல்
(2) கடித்த இடத்தைச் சவர்க்காரமிட்டு சுத்தமான நீரினால் கழுவுதல்
(3) கடித்த இடத்தில் மருந்து பூசுதல்

34. பாதுகாப்புக்காகத் தலைக்கவசம், கையுறை, காற்காப்பு என்பன அணிந்து விளையாடப்படும் ஒரு விளையாட்டு
(1) பெட்மின்ரன் (2) கிரிக்கெற் (3) வொலிபோல்

35. 'சுவசெரிய' அவசர அம்புலன்ஸ் சேவையைப் பெற அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
(1) 1919 (2) 1990 (3) 119



www.ikeduk

36. ஒருவருடைய காலில் பாம்பு கடித்துள்ள சந்தர்ப்பத்தில் அவருக்கு முதலுதவி வழங்கும் போது முதலில் செய்ய வேண்டியது.
(1) நோயாளியின் இரு பாதங்களையும் ஏறத்தாழ ஓர் அடிக்கு உயர்த்தி நீட்டிவிடுதல்
(2) சூடான பானத்தைப் பருகக் கொடுத்தல்
(3) கடித்த இடத்தைச் சுத்தமான நீரினால் சவர்க்காரமிட்டுக் கழுவுதல்

37. நீரில் மூழ்கிய ஒருவருக்கு முதலுதவி அளிக்கும் போது முதலில் செய்ய வேண்டியது யாது?
(1) ஈர உடையை அகற்றுதல்
(2) நன்றாகச் சுவாசிப்பதைச் சோதித்தல்
(3) போர்வையினால் உடலின் வெப்பத்தைப் பாதுகாத்தல்

38. எரிகாயத்துக்கு உள்ளான ஒருவருக்கு முதலுதவி அளிக்கும் போது செய்யக் கூடாதது
(1) எரிவின் மேல் எண்ணெய் அல்லது கொழுப்புகளைப் பூசுதல்
(2) எரியுண்ட இடத்தைக் குளிர் நீரினால் குளிரூட்டல்
(3) கொஞ்சம் கொஞ்சமாக நீர் அருந்தக் கொடுத்தல்

39. இயற்கைக் காரணத்தினால் அனர்த்தம் நிகழக் கூடிய சந்தர்ப்பம்
(1) தாழ் நிலங்களை நிரப்புவதாலும் மணல் அகழ்வதாலும் வெள்ளம் ஏற்படல்
(2) மரம்தறிப்பதாலும் மலைப்பகுதிகளில் மண்ணைவெட்டி அகற்றுவதாலும் மண் சரிவு ஏற்படல்
(3) மின்னல் தாக்கத்தினால் பயிர்ச் செய்கை அழிவடைதல்

40. யானைக்கால், டெங்கு ஆகிய நோய்கள் பரவும் வழி
(1) நோய்க்காவிகளான ஆட்கள் மூலம்
(2) நோய்க்காவிகளான நுளம்புகள் மூலம்
(3) அசுத்தமான உணவு, நீர் என்பவற்றை உட்கொள்வதன் மூலம்

41. இதய நோய் ஏற்பட ஏதுவாகத்தக்க காரணம் எது?
(1) இனிப்பான உணவுகளை அதிகம் உண்ணுதல்
(2) எண்ணெய் கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகளவில் உண்ணுதல்
(3) குறித்த வேளையில் உணவு உண்ணாதிருத்தல்

42. உடன் உணவுகள், எண்ணெய் மற்றும் மிளகாய் அதிகம் அடங்கிய உணவுகளை உட்கொள்ளும் பழக்கம் உடையவருக்கு ஏற்படத்தக்க நோய்
(1) நீரிழிவு (2) இரைப்பையழற்சி (3) உடல்பருத்தல்

43. உயரத்திலிருந்து விழுந்து விலா எலும்பு உடைந்த ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டியது
(1) உடலில் விபத்துக்கு உட்பட்ட இடத்தைத் துணியால் கட்டுதல்
(2) நபரை அசைக்காமல் சமதள இடத்தில் வைத்திருத்தல்
(3) உடலில் விபத்துக்கு உட்பட்ட இடத்தைத் தூய நீரால் கழுவுதல்

44. தீப்பற்றியதன் காரணமாக உடலின் ஒரு பகுதி எரிந்த நபர் ஒருவருக்கு முதலுதவி பெற்றுக் கொடுக்கையில் முதலில் செய்ய வேண்டியது
(1) எரிந்த பகுதியில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஆடைகளை அகற்றுதல்
(2) எரிந்த பகுதியின் மீது எண்ணெய் வகை ஒன்றைப் பூசுதல்
(3) சுத்தமான குளிர்நீரால், எரிந்த பகுதியைக் குளிர்மையாக்கல்

45. இனிப்பான மற்றும் மாப்பொருள் உணவுகளை அதிகம் உண்பதால் ஏற்படத்தக்க நோய்
(1) நீரிழிவு (2) சின்னமுத்து (3) கொப்பளிப்பான்

www.ikedu.lk

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2022

## சுற்றாடல் சார் செயற்பாடுகள் 8

5

45 புள்ளிகள்

சுட்டெண்:..... 1 மணித்தியாலம்

● சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

1. மருத்துவரினால் நோயாளிக்கு விதிக்கப்படும் மருந்தைப் பயன்படுத்தும் போது **குறைந்த அளவு** கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயம்
   (1) மருந்தை உட்கொள்ள வேண்டிய ஊட்டு அளவு (Dose)
   (2) மருந்து உட்கொள்ள வேண்டிய தடவைகள்
   (3) மருந்தை உற்பத்தி செய்த நாடு

2. மனிதன் தொடர்பாடலுக்காக ஆதிகாலத்தில் பயன்படுத்திய முறை **அல்லாதது**
   (1) கொடியசைத்தல்
   (2) மின்னஞ்சலைப் பயன்படுத்தல்
   (3) முரசறைதல்

3. நவீன கால தொடர்பாடல் முறைகளைக் காட்டும் விடை
   (1) குரல்வழி அஞ்சலும், இணையமும்
   (2) புகையை எழுப்புதலும், தீக்குவியல் மூட்டலும்
   (3) கூக்குரலிடலும், சேனைப் பாட்டும்

4. இயற்கையான பூக்களையும் இலைகளையும் கொண்டு வாழ்த்து அட்டை தயாரிக்கும் நான்கு படிமுறைகள் பின்வருமாறு
   A. உலர்த்திய பூக்களையும் இலைகளையும் தேவைக்கேற்ப ஒட்டுதல்
   B. தேவையான அளவுள்ள அட்டைத் துண்டொன்றை வெட்டி எடுத்தல்
   C. இயற்கைப் பூக்களையும் இலைகளையும் புத்தகப் பக்கங்களுக்கு இடையே வைத்து உலரவிடுதல்
   D. பொருத்தமான வாழ்த்து அல்லது நற்பிரார்த்தனையை எழுதுதல்

   இவற்றின் சரியான ஒழுங்கு முறை யாது?
   (1) C,B,A,D (2) C,D,A,B (3) A,D,C,B

5. 'கடிதம்', தொடர்பாடல் கூறுகளில் ஒன்றான ஊடகம் என்பதற்குள் அடங்கும். அதுபோல, 'கடிதம் எழுதுபவர்' அடங்கும் தொடர்பாடல் கூறு எது?
   (1) பெறுநர் (2) அனுப்புபவர் (3) விநியோகிப்பவர்

6. வெளிநாட்டில் வசிக்கும் உமது பேனா நண்பன் பாடசாலைக் கலை விழாவின் போது நீர் பங்கு கொண்ட நிகழ்ச்சியின் படம் ஒன்றை இயன்றவரைத் துரிதமாக அனுப்புமாறு உங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளான். இதற்காக நீங்கள் பயன்படுத்தக் கூடிய மிகவும் பொருத்தமான முறை பின்வருவனவற்றுள் எது?
   (1) கடுகதித் தபால் (2) மின்னஞ்சல் (3) விமானத்தபால்

7. அதிபர் ஒருவருக்குப் பாடசாலை வேளையின் போது அவசரக் கூட்டம் ஒன்றுக்காக ஆசிரியர்களையும் அனைத்து மாணவர்களையும் பிரதான மண்டபத்தில் ஒன்று கூட்டுவதற்கு அவசியமாக உள்ளது. பாடசாலையில் அனைத்து வசதிகளும் உள்ளதாயின் கூட்டத்திற்கு வருகை தருமாறு அனைவருக்கும் ஒரே தடவையில் அறிவித்தல் வழங்குவதற்கு அதிபர் பயன்படுத்தக் கூடிய தொடர்பாடல் ஊடகம் எது?
   (1) ஒலிபெருக்கி (2) தொலைபேசி (3) அறிவித்தல் பலகை

www.ikedu.lk

8. எமக்குத் தகவல்களை 'நேரடி' ஆக வழங்கத்தக்க ஓர் ஊடகம்
(1) பத்திரிகை (2) கையேடுகள் (3) வானொலி

9. கடிதவுறை ஒன்றில் முத்திரையை ஒட்ட வேண்டியது
(1) இடப்பக்கக் கீழ் மூலையில்
(2) இடப்பக்க மேல் மூலையில்
(3) வலப்பக்க மேல் மூலையில்

10. தொடர்பாடல் கூறுகளின் எண்ணிக்கை
(1) 3 (2) 4 (3) 5

11. விஷேட விடுமுறை தினம் ஒன்றை நாடு முழுவதும் அவசரமாக அறிவிப்பதற்கு மிகப் பொருத்தமான ஊடகம்
(1) சுவரொட்டி (2) பத்திரிகை (3) தொலைக்காட்சி


12. செவிப்புலன் மூலம் மாத்திரம் தகவல்களைப் பெறக்கூடிய இரண்டு தொடர்பாடல் ஊடகங்கள் எவை?
(1) ஒலிபெருக்கி, வானொலி (2) செய்திப் பத்திரிகை, தொலைக்காட்சி
(3) செய்திப் பத்திரிகை, ஒலிபெருக்கி

13. கண்கள், காதுகள் ஊடாகத் தகவல்களைப் பெறக்கூடிய ஊடகம்
(1) வானொலி (2) செய்திப்பத்திரிகை (3) தொலைக்காட்சி

14. கண்களின் மூலமாக மாத்திரம் தகவல்களைப் பெறக்கூடிய தொடர்பாடல் ஊடகம் **அல்லாதது**
(1) பத்திரிகை (2) வானொலி (3) சுவரொட்டி

15. இணையவழித் தகவல் தொடர்பு முறைக்கு உதாரணம்
(1) வானொலி (2) மின்னஞ்சல் (3) தந்தி

16. 
இக்குறியீடு குறிப்பது
(1) கர்ப்பிணித் தாய்மாருக்காக என்பது
(2) வலது குறைந்தவர்களுக்காக என்பது
(3) வயது குறைந்தவர்களுக்காக என்பது


17. 
அருகே உள்ள குறியீடு, மின் - இலத்திரனியல் சார்ந்த பொருள்களில் காணப்படும். இப்பொருட்களைப் பயன்படுத்திய பின்னர் கழித்து ஒதுக்கும் போது செய்ய வேண்டியது
(1) குப்பைத் தொட்டியில் இடுதல்
(2) இவ்வாறான கழிவுப் பொருள்களைச் சேகரிக்கும் இடங்களில் ஒப்படைத்தல்
(3) வீட்டில் ஒரு பகுதியில் குவித்து எரியூட்டுதல்

18. மண்ணினுள் இடும் போது உக்கும் தன்மையுள்ள பொருள் **அல்லாதது**
(1) வெங்காயத் தோல் (2) தேங்காய்ப்பூ (3) பிளாத்திக்குத்துண்டு

19. கூட்டெருப் பாத்திரம் ஒன்றில் இடக்கூடிய கழிவுப் பொருள்
(1) கண்ணாடித் துண்டு (2) யோகட் கோப்பை (3) இலை குழைகள்


20. சூரிய ஒளியில் உள்ள மூன்று நிறங்கள்
(1) சிவப்பு, கறுப்பு, நீலம் (2) மஞ்சள், நீலம், கபிலம் (3) நீலம், மஞ்சள், பச்சை

21. ஊசித்துளைக் கமராவின் ஊடாகப் பார்க்கப்படும் பொருளின் விம்பம் தென்படும் திரையைச் செய்யப் பயன்படுவது
(1) வெள்ளை ரிசூத் தாள் (2) கறுப்பு நிறத்தாள் (3) உலோகத் தகடு

22. 

இக்குறியீட்டினால் குறிப்பிடப்படுவது
(1) பல்தொகுதிக் கடை
(2) சிற்றுண்டிச்சாலை
(3) மட்பாண்டத் தொழிற்சாலை

23. உருட்டிவிடும் போது பின்வரும் எந்தத் தரையில் பந்து மிக வேகமாக உருண்டு செல்லும்?
(1) மணல் தரையில் (2) சீமெந்துத் தரையில் (3) புற் தரையில்


24. 

காட்டப்படும் ஊசித் துளைக் கமராவின் ஊடாக தொலைவில் உள்ள மரத்தைப் பார்க்கும் போது கமராவின் திரையில் மரம் காணப்படும் விதம் யாது?


(1)


(2)


(3)

25. 

இந்த உபகரணம் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?
(1) காற்று எந்தத் திசையிலிருந்து வீசுகிறது என்பதை அறிய
(2) காற்று எந்தத் திசையை நோக்கி வீசுகிறது என்பதை அறிய
(3) காற்று வீசும் கதியை அளக்க

26. பின்வருவனவற்றுள் சமூக விரோதச் செயற்பாடு **அல்லாதது** எது?
(1) போதைப் பொருள் வியாபாரம்
(2) சிறுவர்களை வேலைக்கமர்த்துதல்
(3) பஸ்வண்டியினுள் உணவுப் பொருள்களை விற்றல்

27. சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பில் முறையீடு செய்வதற்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
(1) 1919 (2) 1929 (3) 1938

28. இலங்கைக்கு முன்னர் சூரியன் உதயமாகும் ஒரு நாடு
(1) இங்கிலாந்து (2) யப்பான் (3) கனடா

29. இரவு பகல் உருவாவது
(1) பூமி சூரியனைச் சுற்றுவதால்
(2) பூமி தன்னைத்தானே சுற்றுவதால்
(3) சந்திரன் பூமியைச் சுற்றுவதால்

30. புத்தளம் நகரம் அமைந்துள்ள மாகாணம் எது?
(1) கிழக்கு (2) வடமத்தி (3) வடமேல்

31. பொலன்னறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் எந்த மாகாணத்திற்குரியவை?
(1) வடமத்தி (2) கிழக்கு (3) மத்திய

32. 

இலங்கைத் தேசப்படத்தில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ள மாகாணத்தையும் அம்மாகாணத்திற்குரிய பிரதான நகரத்தையும் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) மத்திய மாகாணம், கண்டி நகரம்
(2) தென் மாகாணம், காலி நகரம்
(3) ஊவா மாகாணம், மொனறாகலை நகரம்

www.ikeou.lk

33. இலங்கையில் கடற்கரை **இல்லாத** ஒரு மாகாணம்

(1) வடமேல் மாகாணம் (2) தென் மாகாணம் (3) மத்திய மாகாணம்

34. வடக்கு, சப்ரகமுவ, வடமேற்கு என்பவை இலங்கையின்

(1) மூன்று மாவட்டங்கள் (2) மூன்று நகரங்கள் (3) மூன்று மாகாணங்கள்

35. கோள்களில் மிகப் பெரியது

(1) வியாழன் (2) வெள்ளி (3) செவ்வாய்

36. 

இங்கு காட்டப்பட்டுள்ள அமைப்பைக் கொண்டுள்ள இலங்கையின் மாகாணம் எது?

(1) கிழக்கு மாகாணம்

(2) தென் மாகாணம்

(3) மத்திய மாகாணம்

37. இலங்கையில் உள்ள மாவட்டங்களினதும் மாகாணங்களினதும் எண்ணிக்கைகளை ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடை

(1) 25, 9 (2) 7, 22 (3) 22, 6

38. கிரிகல்பொத்தை, தியலுமை ஆகியன முறையே இலங்கையில் உள்ள

(1) ஒரு காடும் ஓர் ஆறும் ஆகும்

(2) ஒரு மலையும் ஒரு நீர்வீழ்ச்சியும் ஆகும்

(3) ஒரு மலையும் ஒரு குளமும் ஆகும்

39. கதிர்காமப் புனித நகர் அமைந்துள்ள மாகாணம்

(1) தென் மாகாணம் (2) கிழக்கு மாகாணம் (3) ஊவா மாகாணம்

40. களுகங்கை, களனிகங்கை ஆகியன கடலுடன் கலக்குமிடங்கள் அமைந்துள்ள மாகாணம்

(1) மேல் மாகாணம் (2) வட மாகாணம் (3) தென் மாகாணம்

41. கொழும்பு முகத்துவாரப் பிரதேசக் கடலில் விழுவது


(1) நில்வள கங்கை (2) மாணிக்க கங்கை (3) களனி கங்கை

42. அம்பலாந்தோட்டையில் கடலில் கலக்கும் நதியையும் திருகோணமலையில் கடலில் கலக்கும் நதியையும் முறையே காட்டும் விடை எது?

(1) மகாவலி கங்கை, களுகங்கை (2) மாணிக்க கங்கை, நில்வளகங்கை

(3) வளவ கங்கை, மகாவலி கங்கை

43. மாணவர் ஒருவர் ஆக்கி, வகுப்பறையில் காட்சிப்படுத்திய உடுக்கோல அட்டை அருகே காணப்படுகிறது. இதில் காணப்படும் உடுக்கோலம் யாது?



(1) பெருங்கரடி

(2) சிறுகரடி

(3) வேட்டைக்காரன்

44. இலங்கையின் உயர்ந்த நிலத்தையும் தாழ்ந்த நிலத்தையும் காட்டும் படத்தில் உயர்ந்த நிலம் தீட்டப்பட்டிருக்கும் நிறம்

(1) பச்சை (2) நீலம் (3) கபிலம்


45. பின்வருவனவற்றில் தேள் உடுக்கோலத்தைக் காட்டும் உரு எது?



(1)



(2)



(3)

www.keou.lk

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2022
## சுற்றாடல் சார் செயற்பாடுகள் 9

5

42 புள்ளிகள்

சுட்டெண்:..... 1 மணித்தியாலம்

● சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

1. மண் அரிப்பைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளக் கூடிய செயற்பாடு **அல்லாதது**
(1) புல் வளர்த்தல் (2) மரங்களை வெட்டுதல் (3) தேங்காய் உரிமட்டையை அடுக்குதல்


2. அதிக மழை கிடைக்கும் காலத்தில் மழை நீரின் பெரும் பகுதியைத் தேக்கி வைக்கும் ஆற்றல் உள்ள மண்
(1) சதுப்புநில மண் (2) மணல் மண் (3) தோட்ட மண்

3. இலங்கைக்குத் தெற்கே காணப்படுவதும் இலங்கைக்கு வடக்கே காணப்படுவதும் முறையே எவை?
(1) இந்து சமுத்திரம், இந்தியா (2) இந்தியா, மலேசியா (3) தாய்லாந்து, இந்து சமுத்திரம்

4. பின்வருவனவற்றில் இலங்கைக்கு அண்மையில் இருக்கும் நாடு
(1) ஜப்பான் (2) சவூதி அரேபியா (3) இந்தியா

5. தன்னைச் சூழ உள்ள கடலைப் பயன்படுத்தி இலங்கை பெற்றுக் கொள்ளும் பயன் **அல்லாதது**
(1) உப்பளங்களின் ஊடாக கறியுப்பைப் பெறுதல்
(2) பீன்பிடிக் கைத்தொழில் மூலம் கரையோரப் பிரதேசமக்கள் சீவனோபாயத்தைச் செய்து கொள்ளல்
(3) வற்றுப் பெருக்கு சந்தர்ப்பங்களில் மின்சார உற்பத்தி செய்தல்


6. சைக்கிளுடன் இணைக்கப்பட்டுள்ள பற்சில்லுகள், சங்கிலித் தொகுதி ஆகியன பெரிதும் உதவுவது
(1) சைக்கிளின் சமநிலையைப் பேணுவதற்கு
(2) சைக்கிளை இலகுவாக ஓட்டிச் செல்வதற்கு
(3) சைக்கிளைத் தேவையான திசைக்குத் திருப்புவதற்கு

7. 

சாய்வான இந்தத் தளத்தில் பாரமான பொருள் A ஐ மேல் நோக்கி உயர்த்துவதற்குப் பயன்படுத்தக் கூடிய மிகப் பொருத்தமான உபகரணம்
(1) திருகுபிடி (2) நீர்ச்சில்லு (3) கப்பி

8. பாக்குவெட்டியினால் பாக்கினை வெட்ட, பாக்கு வைக்கப்பட வேண்டிய சரியான முறையைக் காட்டுவது

(1)

(2)

(3)


9. 
வேலையை இலகுபடுத்தப் பயன்படும் இப்பொறியின் பெயர்
(1) தபரய
(2) கப்பி
(3) கஸ்பர் வீல்

10. பண்டைக் காலத்தில் செக்கு சுழற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட விலங்கு
(1) மாடு (2) நாய் (3) ஆடு

11. 
உருவில் காட்டப்பட்டிருப்பது
(1) CFL மின்குமிழ் (2) இழை மின்குமிழ் (3) LED மின்குமிழ்

www.ikodu.lk

12. கீழே காட்டப்பட்டுள்ள எந்தச் சுற்றுக்களில் உள்ள மின்குமிழ்கள் ஒளிரும்?





A B C D

(1) A,C ஆகிய இரண்டிலும் மாத்திரம்
(2) B,D ஆகிய இரண்டிலும் மாத்திரம்
(3) A,B,C,D ஆகிய நான்கிலும்

13. மாதவனிடம் சில குண்டூசிகளும் ஓர் உலர்கலமும் இருந்தன. மின்காந்தத்தைச் செய்வதற்கு மேலும் அவனுக்குத் தேவைப்படும் பொருள்கள் எவை?

(1) இரும்பு ஆணியும், மின்குமிழும்
(2) சட்டக்காந்தமும், காவலிடப்பட்ட செப்புக்கம்பியும்
(3) காவலிடப்பட்ட செப்புக்கம்பியும், இரும்பு ஆணியும்

14.




மின்குமிழ் ஒளிரும் வகையில் சரியாக ஒழுங்குபடுத்தப்பட்ட சுற்றுக்கள் எவை?

(1) A உம் B உம் (2) C உம் B உம் (3) C உம் D உம்

15. காந்தம் ஒன்றின் ஒரு முனையை இன்னொரு காந்தத்தின் ஒரு முனைக்கு அருகே கொண்டு செல்லும் போது அவை அப்பால் தள்ளப்படுதல் (தள்ளுகை) இடம் பெறும் சந்தர்ப்பம் பின்வருவனவற்றில் எது?

(1) N S S N (2) S N S N (3) N S N S

16. காந்தத்தினால் கவரப்படும் பொருள்கள் மாத்திரம அடங்கிய விடை

(1) சவரஅலகு, பித்தளைக்கரண்டி (2) குண்டூசி, சவரஅலகு (3) செப்புநாணயம், சவரஅலகு

17. "விடிவெள்ளி நம் விளக்கு ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் ஜலசா" என்ற பாடல்,

(1) கம்மாலைக்காரன் பாடல் (2) கமக்காரர் பாடல் (3) மீனவர் பாடல்

18. யாதேனுமொன்றை இறுக்கமாகப் பற்றிப் பிடிப்பதற்கும் கம்பி போன்றவற்றை வெட்டுவதற்கும் பயன்படுத்தப்படும் மிகப் பொருத்தமான உபகரணம்


(1) குறடு (2) கவர்ச் சுத்தியல் (3) திருப்புளி

19. யாதேனும் ஓர் இடத்தில் மின் பாய்கிறதா எனச் சோதிக்க, பயன்படுத்தப்படும் உபகரணம்



(1) (2) (3)

20. பின்வருவனவற்றில் திசைகாட்டியின் உருவைக் காட்டுவது



(1) (2) (3)

www.ikeou.lk

நாட்டின் எப்பாகத்திலிருந்தும்
கற்பித்தல் அனுபவம் உள்ள திறமையான ஆசிரியர்களிடம்
கல்வி கற்க விரும்புகிறீர்களா

# இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

## LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class


# 76667-4945

அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்

| | |
|---|---|
| Mobile | 076667-4945 |
| WhatsApp | +94 76667-4945 |
| Viber | +94 76667-4945 |
| Email | learneasy.lk@gmail.com |
| Web | www.learneasy.lk |

FB Page - https://www.facebook.com/learneasylk

வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

21. 


மின்குமிழை ஒளிரச் செய்வதற்கு கம்பிகளை இணைக்கும் பொருள் A எதுவாக இருக்க வேண்டும்?
(1) வாணிசுத்தாள்
(2) ஈயத்தாள்
(3) அழிறப்பர்

22. திசைகாட்டி ஒன்றின் சிவப்பு நிறச் சுட்டி காட்டும் திசை எது?
(1) மேற்கு (2) வடக்கு (3) தெற்கு

23. காகிதத்தாள் ஒன்றின் மீது பரப்பி வைக்கப்பட்டிருந்த இரும்புத் தூளில் சட்டக்காந்தமொன்று வைத்து எடுக்கப்பட்டது. காந்தத்தில் இரும்புத்தூள் ஈர்க்கப்பட்டுள்ள விதத்தைச் சரியாகக் காட்டும் படம்



(1)




(2)




(3)


24. மின்காந்தத்தின் மூலம் செயற்படும் கருவி
(1) திசைகாட்டி (2) சைக்கிள் தானமோ (3) மின்மணி

25. பூரணை தினத்திற்கு ஒரு வாரத்திற்குப் பின்னர் சந்திரன் தோன்றும் விதம்


(1)


(2)


(3)

26. 

தக்கை அடைப்பான் ஒன்றின் மீது சட்டக்காந்தம் ஒன்றினை வைத்து நீர்ப்பாத்திரம் ஒன்றில் உள்ள நிரின் மீது மிதக்க விடப்பட்டதைப் படம் காட்டுகிறது. தக்கைமீது வைக்கப்பட்ட சட்டக்காந்தம், நீர்ப்பரப்பில் அசைவது நின்ற பின்னர் அதன் சிவப்புநிற முனைவு காட்டி நிற்கும் திசை எது?
(1) வடக்கு (2) தெற்கு (3) கிழக்கு

27. நீருக்கு இருக்கக்கூடிய ஓர் இயல்பாக **அமையாதது**
(1) நிலையான வடிவம் இருத்தல்
(2) வெப்பமாக்கும் போது நீராவி வெளியேறல்
(3) குளிர்த்தும் போது பனிக்கட்டியாக மாறுதல்

28. நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டி மீது நீர்த்துளி ஒன்றை இடும் போது **இடம்பெறாதது** யாது?
(1) நீர்த்துளி ஆவியாதல் (2) நீர்த்துளி நிறம் மாறுதல் (3) ஒலி எழுதல்

29. பின்வருவனவற்றில் பனிக்கட்டி ஒன்றை நீரில் இட்டால் நிகழாதது எது?
(1) நீர் குளிர்ச்சி அடைதல் (2) நீரின் நிறம் மாற்றமடைதல்
(3) பனிக்கட்டி நீரில் கரைதல்

30. தண்டுகளை நடுவதன் மூலம் கன்றுகளைப் பெறக் கூடிய தாவரம்
(1) மரவள்ளி (2) வெண்டி (3) கறிமிளகாய்

31. பனிக்கட்டிகள் சிலவற்றை ஒரு கண்ணாடிக் குவளையினுள் இட்டு சிறிது நேரம் வெளியே வைத்திருந்த பின்னர் அதில் **அவதானிக்க முடியாதது**
(1) பனிக்கட்டி உருகியிருத்தல் (2) குவளையின் வெளிப்புறம் ஈரமாக இருத்தல்
(3) குவளையில் இருந்து வளிக்குமிழிகள் வெளியேறுதல்

32. பின்வருவனவற்றில் பயிர்ச் செய்கைக்கு நன்மை விளைவிக்கக் கூடிய பிராணி எது?
(1) ஆந்தை (2) நத்தை (3) சிற்றுண்ணி

www.ikeou.lk

33. முற்காலத்தில் வீட்டுத் தோட்டச் செய்கையில் பயிர்களின் பாதுகாப்புக்காகக் கையாண்ட பாரம்பரியமான உத்தி அல்லாதது

(1) வேப்பங் கொட்டைத் திரவம் பயன்படுத்தல்
(2) பறவைகளை ஓட்டுவதற்காகச் சுழலும்தட்டுப் பொருத்துதல்
(3) பயிர்களுக்குக் கிருமி நாசினி தெளித்தல்

34. பயிர்களுக்கு இரசாயனப் பசளையைப் பயன்படுத்துவதால்

(1) நச்சுத் தன்மையற்ற உணவுப் பொருள்கள் கிடைக்கும்
(2) பயிர்களின் விளைச்சல் குறையும்
(3) உணவுப் பொருளுடன் நச்சுத் தன்மை சேரும்

35. வித்து ஒன்று முளைக்கும் போது முதலில் உருவாகும் பகுதி எது?

(1) முளைத்தண்டு (2) இலை (3) முளைவேர்

36. வீட்டுத் தோட்டத்தில் பயிர்களுக்கு இடையில் செவ்வந்திப் பயிரைப் பயிரிடுவதன் முக்கிய நோக்கம்

(1) தோட்டத்திற்கு அழகூட்ட
(2) பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் பூச்சிகளை விரட்ட
(3) தோட்டத்தின் இடஅளவை உச்ச அளவில் பயன்படுத்த

37. பாதையில் நடந்து செல்வோர் நடைபாதைக் கடவை ஊடாகப் பாதையைக் கடப்பதற்கு முன்னர் பாதையில் வாகனங்கள் வருகின்றனவா எனச் சோதித்துப்பார்ப்பதற்கு, பார்க்க வேண்டிய பக்கங்களை சரியாகக் காட்டும் விடை எது?

(1) வலது, இடது, வலது (2) இடது, வலது, இடது (3) வலது, இடது

38. வாகனங்கள் அடிக்கடி பயணிக்கும் வீதி ஒன்றைக் கடக்க வேண்டியுள்ள நடைபயணி ஒருவர், வீதியைக் கடப்பதற்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் எது?

(1) நீங்கள் வீதியைக் கடக்க ஆயத்தமாக உள்ளீர்கள் என்பதை வாகனச் சாரதிகள் கவனிக்கின்றனர் என்பதை
(2) வீதியைக் கடக்க, தனக்கு எதிர்ப்புறத்தில் எவரும் இல்லை என்பதை
(3) வீதியில் பொது வாகனங்கள் மாத்திரமே பயணிக்கின்றன என்பதை

39. வாகனம் ஓட்டும் சாரதி ஒருவர் விடுகின்ற தவறு பின்வருவனவற்றில் எது?

(1) வீதியின் இடதுபுறமாக வாகனத்தை ஓட்டுதல்
(2) வீதிச் சுற்றுவட்டங்களில் வலது புறத்திலிருந்து வரும் வாகனங்கள் செல்வதற்குச் சந்தர்ப்பம் அளித்தபின் தனது வாகனத்தைச் செலுத்துதல்
(3) மற்றொரு வாகனத்தை முந்திச் செல்வதாயின் முன்னால் செல்லும் வாகனத்தின் இடது புறத்தினால் முந்திச் செல்லுதல்

40. தேசப்படம் ஒன்றில் அதிவேகப்பாதை, புகையிரப்பாதை, பெருந்தெரு ஆகியன காட்டப்பட்டுள்ள நிறங்கள் முறையே எவை?

(1) மஞ்சள், கறுப்பு, ஊதா (2) ஊதா, கறுப்பு, சிவப்பு (3) ஊதா, சிவப்பு, கறுப்பு

41. இலங்கையில் உள்ள இயற்கைத் துறைமுகம் எது?

(1) காலித் துறைமுகம் (2) அம்பாந்தோட்டைத் துறைமுகம்
(3) திருகோணமலைத் துறைமுகம்

42. பொதுவாகனமான பேருந்து ஒன்றில் பயணிக்கும் ஒருவர் செய்யக் கூடாதது

(1) மிதிபலகையில் நின்று கொண்டு பயணித்தல்
(2) பயணச் சீட்டைப் பெற்றுக் கொள்ளுதல்
(3) கர்ப்பிணித் தாய்மாருக்கு ஆசனத்தை வழங்குதல்

www.ikedu.lk

QFirst **சுற்றாடல்சார் செயற்பாடுகள் - 01 - 2022**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (3) | 3. (1) | 4. (2) | 5. (3) | 6. (1) | 7. (2) | 8. (2) | 9. (1) |
| 10. (2) | 11. (2) | 12. (1) | 13. (3) | 14. (3) | 15. (1) | 16. (3) | 17. (2) | 18. (1) |
| 19. (3) | 20. (2) | 21. (3) | 22. (3) | 23. (1) | 24. (1) | 25. (2) | 26. (3) | 27. (3) |
| 28. (3) | 29. (3) | 30. (3) | 31. (2) | 32. (1) | 33. (3) | 34. (2) | 35. (1) | 36. (2) |
| 37. (1) | 38. (1) | 39. (2) | 40. (1) | 41. (3) | 42. (1) | 43. (2) | 44. (1) | 45. (3) |
| 46. (2) | 47. (2) | 48. (3) | 49. (2) | 50. (2) | | | | |

**சுற்றாடல்சார் செயற்பாடுகள் - 02 - 2022**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (1) | 3. (3) | 4. (2) | 5. (1) | 6. (3) | 7. (2) | 8. (3) | 9. (1) |
| 10. (1) | 11. (3) | 12. (2) | 13. (2) | 14. (3) | 15. (1) | 16. (2) | 17. (1) | 18. (1) |
| 19. (3) | 20. (1) | 21. (3) | 22. (1) | 23. (1) | 24. (3) | 25. (1) | 26. (1) | 27. (1) |
| 28. (3) | 29. (3) | 30. (2) | 31. (3) | 32. (3) | 33. (2) | 34. (1) | 35. (1) | 36. (1) |
| 37. (1) | 38. (1) | 39. (3) | 40. (2) | 41. (3) | 42. (1) | 43. (2) | 44. (2) | 45. (3) |

**சுற்றாடல்சார் செயற்பாடுகள் - 03 - 2022**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (3) | 2. (2) | 3. (1) | 4. (1) | 5. (2) | 6. (1) | 7. (3) | 8. (2) | 9. (3) |
| 10. (1) | 11. (3) | 12. (1) | 13. (3) | 14. (1) | 15. (1) | 16. (3) | 17. (2) | 18. (1) |
| 19. (2) | 20. (1) | 21. (3) | 22. (1) | 23. (2) | 24. (3) | 25. (3) | 26. (1) | 27. (3) |
| 28. (1) | 29. (1) | 30. (3) | 31. (1) | 32. (1) | 33. (3) | 34. (3) | 35. (3) | 36. (1) |
| 37. (3) | 38. (3) | 39. (3) | 40. (2) | 41. (2) | 42. (3) | 43. (2) | 44. (2) | 45. (3) |
| 46. (3) | 47. (2) | 48. (3) | 49. (3) | 50. (3) | | | | |

**சுற்றாடல்சார் செயற்பாடுகள் - 04 - 2022**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (3) | 2. (1) | 3. (2) | 4. (1) | 5. (2) | 6. (3) | 7. (2) | 8. (3) | 9. (1) |
| 10. (2) | 11. (2) | 12. (2) | 13. (3) | 14. (2) | 15. (1) | 16. (2) | 17. (3) | 18. (1) |
| 19. (2) | 20. (3) | 21. (3) | 22. (2) | 23. (1) | 24. (2) | 25. (3) | 26. (2) | 27. (1) |
| 28. (3) | 29. (1) | 30. (1) | 31. (2) | 32. (1) | 33. (3) | 34. (2) | 35. (3) | 36. (2) |
| 37. (1) | 38. (3) | 39. (3) | 40. (3) | 41. (1) | 42. (2) | 43. (3) | 44. (1) | 45. (3) |

**சுற்றாடல்சார் செயற்பாடுகள் - 05 - 2022**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (2) | 3. (1) | 4. (2) | 5. (1) | 6. (2) | 7. (3) | 8. (1) | 9. (3) |
| 10. (3) | 11. (2) | 12. (3) | 13. (3) | 14. (2) | 15. (3) | 16. (1) | 17. (3) | 18. (2) |
| 19. (2) | 20. (1) | 21. (3) | 22. (1) | 23. (1) | 24. (1) | 25. (1) | 26. (3) | 27. (3) |
| 28. (3) | 29. (2) | 30. (1) | 31. (3) | 32. (3) | 33. (1) | 34. (1) | 35. (1) | 36. (3) |
| 37. (3) | 38. (3) | 39. (1) | 40. (3) | 41. (3) | 42. (2) | 43. (3) | 44. (2) | 45. (1) |

www.ikeduk

## சுற்றாடல்சார் செயற்பாடுகள் - 06 - 2022

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (3) | 2. (2) | 3. (2) | 4. (1) | 5. (3) | 6. (1) | 7. (3) | 8. (2) | 9. (3) |
| 10. (2) | 11. (2) | 12. (3) | 13. (3) | 14. (1) | 15. (1) | 16. (3) | 17. (1) | 18. (1) |
| 19. (1) | 20. (1) | 21. (3) | 22. (1) | 23. (1) | 24. (2) | 25. (2) | 26. (3) | 27. (3) |
| 28. (2) | 29. (2) | 30. (2) | 31. (1) | 32. (1) | 33. (1) | 34. (2) | 35. (1) | 36. (3) |
| 37. (1) | 38. (2) | 39. (1) | 40. (3) | 41. (3) | 42. (2) | 43. (2) | 44. (1) | 45. (1) |

## சுற்றாடல்சார் செயற்பாடுகள் - 07 - 2022

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (3) | 3. (1) | 4. (3) | 5. (2) | 6. (2) | 7. (3) | 8. (1) | 9. (2) |
| 10. (3) | 11. (2) | 12. (2) | 13. (3) | 14. (1) | 15. (1) | 16. (3) | 17. (2) | 18. (1) |
| 19. (3) | 20. (2) | 21. (1) | 22. (3) | 23. (3) | 24. (1) | 25. (2) | 26. (2) | 27. (3) |
| 28. (1) | 29. (2) | 30. (3) | 31. (1) | 32. (3) | 33. (2) | 34. (2) | 35. (2) | 36. (3) |
| 37. (2) | 38. (1) | 39. (3) | 40. (2) | 41. (2) | 42. (2) | 43. (2) | 44. (3) | 45. (1) |

## சுற்றாடல்சார் செயற்பாடுகள் - 08 - 2022

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (3) | 2. (2) | 3. (1) | 4. (1) | 5. (2) | 6. (2) | 7. (1) | 8. (3) | 9. (3) |
| 10. (1) | 11. (3) | 12. (1) | 13. (3) | 14. (2) | 15. (2) | 16. (2) | 17. (2) | 18. (3) |
| 19. (3) | 20. (3) | 21. (1) | 22. (2) | 23. (2) | 24. (2) | 25. (1) | 26. (3) | 27. (2) |
| 28. (2) | 29. (2) | 30. (3) | 31. (1) | 32. (2) | 33. (3) | 34. (3) | 35. (1) | 36. (1) |
| 37. (1) | 38. (2) | 39. (3) | 40. (1) | 41. (3) | 42. (3) | 43. (3) | 44. (3) | 45. (3) |

## சுற்றாடல்சார் செயற்பாடுகள் - 09 - 2022

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (1) | 3. (1) | 4. (3) | 5. (3) | 6. (2) | 7. (3) | 8. (1) | 9. (2) |
| 10. (1) | 11. (3) | 12. (3) | 13. (3) | 14. (3) | 15. (1) | 16. (2) | 17. (3) | 18. (1) |
| 19. (1) | 20. (3) | 21. (2) | 22. (2) | 23. (2) | 24. (3) | 25. (3) | 26. (1) | 27. (1) |
| 28. (2) | 29. (2) | 30. (1) | 31. (3) | 32. (1) | 33. (3) | 34. (3) | 35. (3) | 36. (2) |
| 37. (1) | 38. (1) | 39. (3) | 40. (2) | 41. (3) | 42. (1) | | | |

www.ikedu.lk